519

# சுதந்திர

## தமிழ் வாசகம்

### மூன்றாம் புத்தகம்

(III CLASS)

519

4-48

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1948

TB
031(3)
N48
88958

...ன் பப்ளிஷர்ஸ்

சுதந்திர

# தமிழ் வாசகம்

## மூன்றாம் புத்தகம்

ஆக்கியோர் :

R. நாகராஜ ராவ்,

ஆசிரியர், E. R. ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி

V. நரசிம்ம அய்யர், B.O.L.,

மிழாசிரியர், சேவா சதனம் ஹைஸ்கூல், சென்னை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 DEC 1948

ஸதர்ன் பப்ளிஷர்ஸ்

தெப்பக்குளம் :: திருச்சி

பதிப்புரிமை] [விலை 0–7–0

முதற் பதிப்பு, நவம்பர் 1948

TB
031(3)
N48

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
88958
சென்னை-600 008.

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

# முகவுரை

'சுதந்திர தமிழ் வாசகம்' என்னும் பெயருடன் மலரும் இப்புத்தகத்தில் உள்ள பாடங்கள் காலத்திற் கேற்பப் பழையன களைந்து, புதியன புகுத்தி எழுதப் பெற்றுள்ளன. வகுப்பிற்கேற்பப் படிப்படியான முறை யில் வாசிப்பதற்கு வேண்டிய பயிற்சிகளைக் கொடுப்பது என்ற நோக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டு, விஷயங்களைத் தேர்வதிலும் கவனம் செலுத்தப் பெற் றுள்ளது. உலகவியலில் பொருந்தாதனவற்றை அறவே நீக்கி, சமூக ஒற்றுமையும், பரந்த நோக்கமும், தேச பக்தியும், ஊக்கமும், அளிக்கற்பாலனவாகிய விஷயங் களையே பாடமுறையில் அமைத்துள்ளோம். வகுப்பு களைக் கையாண்ட அநுபவத்தைக் கொண்டு வெளியிடப் பெற்றுள்ள இப்புத்தகங்கள் மாணவர்களுக்கு வேண்டிய மொழிப் பயிற்சியையும் நல்லறிவையும் பயக்குமென நம்புகிறோம்.

ஆக்கியோர்

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | பொங்கல் பண்டிகை | 1 |
| 2. | வாசிக்கும் முறை | 4 |
| 3. | முன்யோசனையின் அவசியம் | 7 |
| 4. | திருவள்ளுவர் | 10 |
| 5. | வானவில் | 13 |
| 6. | பொறுமையுள்ள சிறுவன் | 16 |
| 7. | பாரத தேசம் | 20 |
| 8. | மயில் | 23 |
| 9. | திரிசிரா மலை | 27 |
| 10. | அப்பாஜியின் புத்திகூர்மை | 30 |
| 11. | திருவிழாக்கள் | 34 |
| 12. | அறிவில்லாதவர் நட்பு கூடாது | 37 |
| 13. | ஆலமரம் | 41 |
| 14. | சுட்ட பழமும் சுடாத பழமும் | 44 |
| 15. | ஆறு | 48 |
| 16. | ஆகாய விமானம் | 50 |
| 17. | பாரியின் கருணை | 54 |
| 18. | காகிதம் சொல்லிய கதை | 57 |
| 19. | கடிதம் எழுதுதல் | 60 |
| 20. | உல்லாசப் பிரயாணம் | 64 |
| 21. | மரியாதை அறிந்த சிறுவன் | 70 |
| 22. | காந்தியின் இளமை | 75 |
| 23. | காட்சிச் சாலை | 79 |
| 24. | நெசவுத் தொழில் | 87 |
| 25. | நம் தாயகம் | 93 |
| 26. | பள்ளிக்கூட நட்பு | 96 |
| 27. | வாழ்க ! வாழ்க ! | 103 |
| 28. | ஆத்திசூடி | 105 |
| 29. | கொன்றை வேந்தன் | 106 |

# சுதந்திர
# தமிழ் வாசகம்

## 1. பொங்கல் பண்டிகை

பொங்கல் பண்டிகை தமிழ் நாட்டினருக்கு மிகவும் முக்கியமான ஒரு பண்டிகை. ஒவ்வொரு ஆண்டிலும் தை மாதத்தின் முதல் நாள் இது கொண்டாடப்படும். பொங்கலுக்கு முந்திய நாள்



போகிப் பண்டிகை. பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல்.

போகிப் பண்டிகைக்கு இந்திர விழா என்பது பண்டைப் பெயர். போகி என்ற சொல் இந்திரனைக் குறிக்கும். இந்திரனின் அருளால் தான் மழை பெய்கிறதென்பது நம் நாட்டவரின் நம்பிக்கை. மழை விவசாயத்துக்கு இன்றியமையாதது. ஆகையால் பயிர்கள் விளைந்து அறுவடையானதும் இந்திரனுக்கு நன்றி செலுத்தும் முறையில் இந்திர விழா கொண்டாடப்படுகிறது.

குடியானவர் பொங்கல் பண்டிகை யன்று புதிய நெல்லரிசியைக் கொண்டு பொங்கல் பொங்கி, உறவினரும் நண்பருமாக விருந்துண்டு களிப்பர்.

குடியானவர்களுக்குப் பயிர்த் தொழிலில் உதவி செய்தவை மாடுகளே யல்லவா? அதனால் தான் அவைகளுக்கு நன்றி செலுத்துவதற்காக, மாட்டுப் பொங்கல் கொண்டாடப் படுகிறது. பொங்கலுக்கு மறுநாள் மாடுகளைக் குளிப்பாட்டி அவற்றிற்கு வெல்லப் பொங்கல் வைத்துப் படைப்பார்கள். மாலையில் அவற்றை அலங்கரித்து உற்சாகமாக ஓட விடுவார்கள்.

பொங்கல் பண்டிகையைச் சங்கராந்தி என்றும் சொல்வதுண்டு. தை மாதம் முதல் நாள் சூரியன் மகர ராசிக்குப் பெயருகின்றது. இது வடமொழியில் மகர சங்கராந்தி எனப்படும். இது

முதல் ஆறுமாத காலத்திற்கு உத்தராயணம் என்று பெயர். பெரும்பாலான திருவிழாக்கள் இக்காலத்தில் தான் நடைபெறும். ஆகவே உத்தராயணத்தின் ஆரம்பம் ஒரு மங்கள நாளாகக் கொண்டாடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| **பொங்கல்** | முந்திய நாள் | அருள் |
| **பண்டிகை** | மறு நாள் | அறுவடை |
| **போகி** | இந்திரன் | விழா |
| **மாட்டுப் பொங்கல்** | உத்தராயணம் | சங்கராந்தி |
| **விருந்து** | மகரராசி | மங்களம் |

## கேள்விகள்

1. பொங்கல் பண்டிகை எப்போது கொண்டாடப்படும்?
2. பொங்கலுக்கு முந்திய நாள் என்ன பண்டிகை?
3. மாட்டுப் பொங்கல் எதற்காகக் கொண்டாடப்படும்?

# 2. வாசிக்கும் முறை



படத்திலுள்ள சிறுவனைப் பாருங்கள். அவன் எவ்வாறு தன் புத்தகத்தைப் பிடித்திருக்கிறான்? புத்தகத்தை இடக்கையால் பற்றி, அதை மார்பளவில் உயர்த்திப் பிடித்துக்கொள்ள வேண்டும். முகத்தை மறைக்கும்படி புத்தகத்தைப் பிடிக்கக் கூடாது. தலை குனிந்தபடியே படிக்கக் கூடாது.

வகுப்பில் படிக்கும்பொழுது படிக்கும் விஷயத்தைக் கண்ணால் பார்த்து மனத்தில் கிரகித்துக் கொள்ள வேண்டும்; பிறகு முகம் நிமிர்ந்து, வகுப்பைப் பார்த்து வாக்கியத்தைக் கூறவேண்

டும். இவ்வாறே ஒவ்வொரு வாக்கியமாகப் படிக்கவேண்டும்.

எல்லா வாக்கியங்களையும் ஒரே குரலில் வாசிக்கக்கூடாது. ஆங்காங்குள்ள கருத்துக்குத் தக்கபடி குரலை உயர்த்தியும் தாழ்த்தியும் வாசிக்க வேண்டும். சொற்களைத் தெளிவாகவும் கேட்போருக்கு விளங்கும்படியாகவும் படிப்பதே நல்ல முறை. கருத்து முடியும் இடங்களில் சிறிது நிறுத்தியும், வியப்பு, அச்சம், வினு முதலியன தோன்றும்படியும், ஏற்றபடி குரலை மாற்ற வேண்டும்.

வாசிப்பதற்கு உதவியாக ஆங்காங்கு நிறுத்துக் குறிகள் உபயோகிக்கப்படும். அவை பின் வருமாறு :—

. இது முற்றுப்புள்ளி. ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் இது வைக்கப்படும்.

; இது அரைப்புள்ளி. வாக்கியங்கள் இணைந்துவரும்போது, ஒரு சொற்றொடரின் கருத்து முடிந்த இடத்தில் இக்குறி வைக்கப்படும்.

, இது கால்புள்ளி. வாக்கியத்தின் ஒரு பகுதியில் கருத்தைப் பிரித்துக்காட்ட இது உதவும்.

! இது ஆச்சரியக்குறி. அச்சம், வியப்பு

முதலிய உணர்ச்சிகளைக் காட்ட இக்குறி இடப்படும்.

? இது விஞக்குறி. விஞ வாக்கியத்தின் முடிவில் இக்குறி இடப்படும்.

" " இவை மேற்கோள் குறிகள். ஒருவர் பேசியதை அவர் பேசியபடியே எழுதும் பொழுது இவை உபயோகிக்கப்படும்.

இந்த நிறுத்துக் குறிகளைப் பாடங்களில் ஆங்காங்குக் கவனித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

| | | |
|---|---|---|
| **மார்பளவில்** | **தெளிவாக** | **வியப்பு** |
| **மறைக்கும்படி** | **விளங்கும்படி** | **அச்சம்** |
| **விஷயம்** | **தோன்றும்படி** | **விஞ** |
| **நிமிர்ந்து** | **ஏற்றபடி** | **வாக்கியம்** |
| **ஆச்சரியம்** | **உணர்ச்சி** | **மேற்கோள்** |

## கேள்விகள்

1. வாசிக்கும்போது புத்தகத்தை எப்படிப் பிடித்துக் கொள்ள வேண்டும்?
2. படிக்கும்போது குரலை எப்படி மாற்றவேண்டும்?
3. நிறுத்துக் குறிகள் யாவை?

## பயிற்சி

பின்வரும் சொற்றொடர்களில் தகுந்த இடங்களில் முற்றுப்புள்ளி வைத்து எழுது :—

நான் படிக்கிறேன் இது மூன்றும் பாடப்புத்தகம் இது புதிய புத்தகம் என் தந்தை இதை எனக்கு வாங்கித்தந்தார்

# 3. முன் யோசனையின் அவசியம்

ஒரு மலைக் காட்டில் ஓர் ஆடு இருந்தது. ஒரு நாள் அது எதிரிலிருந்த மற்றொரு மலைக்குப் போய் மேய விரும்பிற்று. இடையில் ஒரு பள்ளத்தாக்கு இருந்தது. அதைக் கடப்பதற்குக் குறுக்கே ஒடுக்கமான ஒரு பாதை இருந்தது.



அப்பாதையில் ஒரே ஒரு ஆடுதான் நடக்க முடியும். அப்பாதையின் வழியே அந்த ஆடு நடந்து சென்றது. சிறிது தூரம் சென்றதும், எதிரில் மற்றொரு ஆடு இந்தப் பக்கத்திற்கு வந்து கொண்டிருந்தது.

இரண்டு ஆடுகளும் ஒன்றை நோக்கி மற்றொன்று நடந்தன. அப்பாதையின் நடு மத்தியில் இரண்டும் எதிர் எதிராகச் சந்தித்தன. ஒதுங்கி நடப்பதற்கே இடமில்லை என்றால், திரும்பிச் செல்ல முடியுமா? கோபத்தோடு ஒன்றை யொன்று பார்த்தன. பிறகு தலையோடு தலை மோதிக் கொண்டன; ஒன்றை யொன்று பலமாக முட்டித்தள்ள ஆரம்பித்தன. கடைசியில் என்ன நேர்ந்தது? இரண்டும் பள்ளத் தாக்கில் விழுந்து இறந்தன.

அதே மலையில் மற்றொரு ஆடு வசித்து வந்தது. ஒரு நாள் அது எதிர்ப்புறத்திற்குச் செல்ல விரும்பிற்று.

முன்கூறிய ஒடுங்கிய பாதையில் அந்த ஆடு நடந்து சென்றது. சிறிது தூரம் சென்றதும் எதிர்ப்புறத்திலிருந்து மற்றொரு ஆடு வருவதைக் கண்டது. இரண்டு ஆடுகளும் அப் பாதையின் இடையில் எதிர் எதிராகச் சந்தித்தன. ஆனால் இவை முட்டி மோதிக் கொள்ளவில்லை; செங்குத்தான பாதையையும், பள்ளத்தாக்கையும் கவனித்தன; சிறிது நேரம் யோசனை செய்தன.

ஓர் ஆடு கீழே படுத்துக்கொண்டது. மற்றொன்று மெதுவாக அதன் மேல் நடந்து

இப்பால் வந்து விட்டது. உடனே படுத்திருந்த ஆடும் எழுந்து தன் வழியே சென்றது. தம்



முடைய மதியால் இரண்டு ஆடுகளும் நன்மை அடைந்தன.

| | | |
|---|---|---|
| இழந்தன | நோக்கி | பள்ளத்தாக்கு |
| மேய | முட்டி | ஒடுக்கமான |
| குறுக்கே | மோதி | எதிர் எதிராக |
| பாதை | மலைக்காடு | சந்தித்தன |
| | யோசனை | |

### கேள்விகள்

1. புத்தியில்லாத ஆடுகள் ஏன் இறந்தன?

2. புத்தியுள்ள ஆடுகள் எவ்வாறு அபாயத்திலிருந்து தப்பின ?

3. இப்பாடத்திலிருந்து நீ தெரிந்து கொள்ளும் நீதி என்ன ?

### பயிற்சி

1. குறுக்கே, ஒடுக்கமான, எதிர் எதிராக—இந்த வார்த்தைகளை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

2. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து எழுது :—

அதே மலையில் மற்றொரு ஆடு வசித்தது ஒரு நாள் அது எதிர்ப்புறத்திற்குச் செல்ல விரும்பிற்று முன்கூறிய ஒடுங்கிய பாதையில் அது சென்றது எதிர்ப்புறத்திலிருந்து மற்றொரு ஆடு வருவதைக் கண்டது

## 4. திருவள்ளுவர்

தலை சிறந்த தமிழ்ப் புலவர்களுள் திருவள்ளுவர் ஒருவர். திருவள்ளுவரின் பெருமையை எல்லாரும் கொண்டாடுகிறார்கள்.

திருவள்ளுவரின் தாயார் பெயர் ஆதி; தந்தையார் பெயர் பகவன். வள்ளுவர் வாசுகி என்னும் பெண்மணியை மணம் செய்து கொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தி வந்தார்.

திருவள்ளுவர் தம் வாழ்க்கைக்காக நெசவுத் தொழிலைச் செய்து வந்தார். அவர் அறிவும்,

ஒழுக்கமும் குன்றுதவர். அவர் தாம் உணர்ந்த அறிவு நுட்பங்களை எல்லோருக்கும் சொல்ல விரும்பினர். அதனுல் அவர் திருக்குறள் என்ற ஓர் அரிய நீதி நூல் இயற்றியருளினர்.

திருக்குறள் மிகக் குறுகிய செய்யுட்களால் ஆனது; படிப்பதற்கு எளிது; ஆழ்ந்த கருத்துக்களைக் கொண்டது. திருக்குறளைப் படிப்பது ஒவ்வொரு தமிழனுக்கும் முக்கியகடமையாகும்.

திருவள்ளுவரின் கொள்கைகள் எல்லாருக்கும் பொதுவானவை. எல்லாச் சமயத்தாரும் திருக்குறளை விரும்புகின்றனர். எல்லா நாட்டினரும் திருக்குறளைக் கொண்டாடுகிருர்கள்.

சிறு வயதிலிருந்தே திருக்குறளை மனப் பாடம் செய்யவேண்டும். அந்நூலை ஆண் பாலாரும் படிக்கலாம்; பெண் பாலாரும் படிக்க லாம்; அனைவரும் படிக்கலாம். திருக்குறளைப் படிப்பதால் உண்மையான அறிவு உண்டாகும்; நல்ல ஒழுக்கம் படியும். அதில் கூறியுள்ளபடி நடப்பவர்கள் இன்பமும் பெருமையும் அடை வார்கள்.

| | | |
|---|---|---|
| கொள்கை | ஆண்பாலார் | சமயத்தார் |
| சமயம் | பெண்பாலார் | உடன் பிறந்தார் |
| நீதிநூல் | அனைவரும் | அறிவு நுட்பம் |
| மனப்பாடம் | ஒழுக்கம் | ஆழ்ந்த கருத்து |

## கேள்விகள்

1. திருவள்ளுவரின் தாயார் பெயர் என்ன? தந்தை யார் பெயர் என்ன?
2. திருவள்ளுவர் இயற்றிய அரிய நூல் எது?
3. தமிழரின் கடமை என்ன?

## பயிற்சி

1. அனைவரும், மனப்பாடம், நெசவுத் தொழில் — இந்த வார்த்தைகளை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது.

2. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமைத்து வாக்கியங்களைப் பூர்த்தி செய் :—

திருவள்ளுவர் வாழ்க்கைக்காக ——— செய்து வந்தார்.

திருவள்ளுவரின் கொள்கைகள் எல்லோருக்கும் ——.

# 5. வானவில்



**தம்பி**:—அண்ணா, அது என்ன? வானத்திலே எத்தனை வர்ணங்கள்!

**அண்ணன்**:—ஆம், அதற்கு வானவில் என்று பெயர்.

**த**:—வானவில் என்றால் என்ன அண்ணா? அதில் பல வர்ணங்கள் ஏது?

**அ**:—அது ஒரு பெரிய வில்லைப்போல் நீண்டு, வளைந்து காணப்படுகிறது; வானத்தில் இருக்கிறது. ஆகையால் அதற்கு **வானவில்** என்று பெயர்.

த:—வானவில் எப்போதும் தெரிகிறதில்லையே! கரிய மேகம் சூழ்ந்திருக்கும் போது மட்டும் அல்லவா தெரிகிறது! அதற்கு என்ன காரணம்? பல நிறங்கள் எவ்வாறு தோன்று கின்றன?

அ:—தம்பி, அந்நிறங்கள் சூரிய கிரணங்களி லுள்ள நிறங்கள். மேகத்திலுள்ள நீர்த் துளிகளில் சூரிய கிரணங்கள் படும் பொழுது, நிறங்கள் பிரிந்து தெரிகின்றன.

த:—சூரிய கிரணங்களில் பல நிறங்கள் உண்டா? வெண்மை என்றல்லவா நினைத்திருந்தேன்!

அ:—நீ ஒரு பட்டைக் கண்ணாடியை வைத்துக் கொண்டு, சூரிய வெளிச்சத்தில் காட்டி விளையாடுவது உண்டல்லவா! அதில் பல நிறங்கள் தெரிவதைக் கவனித்ததில்லையா!

த:—ஆம், பட்டைக் கண்ணாடியில் தெரியும் நிறங்களும் இதே நிறங்கள்தான்.

அ:—கண்ணாடியில் அந்நிறங்கள் எவ்வாறு வந்தன? சூரிய ஒளி அதன் வழியே செல் கிறது. அப்போது சூரிய கிரணங்களின் உண்மையான நிறங்கள் பிரிந்து தெரி கின்றன. மேகத்திலுள்ள நீர்த்துளிகளும் கண்ணாடிபோல் தெளிவாக உள்ளவை; ஆகையால் அவற்றின் வழியாகச் சூரிய

கிரணங்கள் செல்லும்போதும் அந்நிறங்கள் தெரிகின்றன. இப்போது அந்நிறங்களின் வகைகளைக் கவனித்துச்சொல்லு.

ஆ:—வானவில்லில் ஏழு நிறங்கள் காணப்படுகின்றன. சில நிறங்களின் பெயர்கள் எனக்குத் தெரியவில்லை.

அ:—ஏழு நிறங்களின் பெயர்களையும் வரிசையாகச் சொல்லுகிறேன். அவைகளை ஞாபகத்தில் வைத்துக்கொள். அவை, ஊதா, கருநீலம், நீலம், பச்சை, மஞ்சள், கிச்சிலி, சிவப்பு என்பன.

| | | |
|---|---|---|
| **வர்ணங்கள்** | **நீர்த்துளி** | **சூரிய கிரணம்** |
| **வானவில்** | **கண்ணுடி** | **பட்டைக் கண்ணுடி** |
| **மேகம்** | **ஞாபகத்தில்** | **சூரிய வெளிச்சம்** |

## கேள்விகள்

1. வானவில் எப்போது தெரியும் ?
2. வானவில்லில் தெரியும் நிறங்கள் என்னென்ன ?
3. அவை எவற்றின் நிறங்கள் ?

## பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமைத்து எழுது :—

வானவில்லில்——நிறங்கள் காணப்படுகின்றன.

மேகத்திலுள்ள நீர்த்துளிகள்——போல் தெளிவாக உள்ளவை.

2. கண்ணாடி, மேகம், நீர், நிறம், வானம், சூரியன், மனிதன், மரம், மாடு, பூச்சி—இவை பொருள்களைக் குறிக்கும் சொற்கள். சில பொருள்கள் உயிருள்ளவை; சில பொருள்கள் உயிர் இல்லாதவை. ஏதேனும் ஒரு பொருளின் பெயராயுள்ள சொல் **பெயர்ச் சொல்** என்று சொல்லப்படும்.

3. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களைக் கூறு :—

(i) கண்ணாடி தெளிவாக இருக்கும்.
(ii) தோட்டத்தில் மரங்கள் உயரமாக வளர்ந்திருக்கின்றன.
(iii) தெருவில் குழந்தைகள் விளையாடுகிறார்கள்.

## 6. பொறுமையுள்ள சிறுவன்

காவிரி யாற்றின் கரையில் திருவளர் சோலை என்றொரு சிற்றூர் உண்டு. அவ்வூரில் கருணையப்பர் என்றொரு கனவான் இருந்தார். அவர் ஏழைகளிடத்தில் இரக்கம் உடையவர்; சிறுவர்களிடம் அவருக்குத் தனிப் பிரியம் இருந்தது.

தினந்தோறும் அவர் சிறுவர் சிறுமிகளுக்கு ஆளுக்கொரு ரொட்டி கொடுப்பார். ஒவ்வொரு நாள் காலையிலும், திரளான பிள்ளைகள் அவருடைய வீட்டு வாயிலில் கூடுவார்கள். " நான்

முன்னே, நீ முன்னே" என்று ஒருவர்மேல் ஒருவர் விழுந்துகொண்டும், ஒருவரை யொருவர் தள்ளிக் கொண்டும் போய் ரொட்டியைப் பெறு வார்கள். கருணையப்பர் நகை முகத்துடனும், பொறுமையுடனும் ஆளுக்கொரு ரொட்டி கொடுப்பார்.

அச்சிறுவர் கூட்டத்தில் குணசீலன் என் பவன் ஒருவன். அவன் ஓர் ஏழைப் பையன். அவன் மட்டும் கூட்டத்தில் விழமாட்டான்; பொறுமையாக விலகி நிற்பான். எல்லாப் பிள்ளைகளும் வாங்கிக்கொண்டபின், கடைசியில் கருணையப்பரிடம் சென்று ரொட்டியைப் பெறுவான்.

குணசீலனுடைய அடக்கத்தையும், பொறு மையையும் கருணையப்பர் கவனித்துக்கொண்டே இருந்தார். ஒரு நாள் அவனுக்கு ஒரு வெகுமதி அளிக்க எண்ணினர். ஒரு ரொட்டித் துண்டில் ஒரு பொற்காசை மறைத்துத் திணித்து வைத்திருந்தார். குணசீலன் வழக்கம் போல் கடைசியில் சென்று கையை நீட்டினன்; அவர் கொடுத்த ரொட்டியைக் களிப்புடன் பெற்ருன். வீட்டிற்குச் சென்று அதை விண்ட போது அதனுள்ளிருந்த பொற்காசைக் கண் டான். தவறுதலாக அக்காசு ரொட்டிக்குள்

வந்திருக்கக்கூடும் என்று அவன் எண்ணினன். மறுநாள் அக்காசை எடுத்துச் சென்று, வணக்கத்துடன் அதை அவரிடம் கொடுத்தான்.

கருணையப்பர் அக்காசைப் பெற்றுக் கொள்வாரா? "பையா, உன் அடக்கத்திற்கும், பொறுமைக்கும் பரிசாக, நான் இப்பொற்காசை ரொட்டியில் இட்டுக் கொடுத்தேன்; அதை நீயே வைத்துக்கொள்" என்றார்.

| | | |
|---|---|---|
| சிற்றூர் | நகைமுகம் | பொற்காசு |
| கனவான் | அடக்கம் | வெகுமதி |
| திணித்து | களிப்புடன் | பரிசு |

## கேள்விகள்

1. கருணையப்பர் என்பவர் யார்? அவர் எந்த ஊரில் வசித்து வந்தார்?
2. பிள்ளைகள் எவ்வாறு ரொட்டியைப் பெறுவார்கள்?
3. குணசீலன் எவ்வாறு ரொட்டியைப் பெறுவான்?
4. குணசீலனுக்குக் கிடைத்த பரிசு என்ன?

## பயிற்சி

1. கீழ்க்கண்ட வார்த்தைகளை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் எழுது :—

நகைமுகம், பொற்காசு, பரிசு, களிப்புடன்.

2. பின்வரும் வார்த்தைகளுக்கு எதிரான அர்த்தமுடைய வார்த்தைகளைச் சொல்லு :

(உதாரணம்: சிறிது × பெரிது.)

சிற்றார், ஏழை, பிரியம், கடைசி.

3. பின்வரும் வாக்கியங்களிலுள்ள பெயர்ச் சொற்களைக் கூறு :

(i) குணசீலன் வழக்கம் போல் கடைசியில் சென்று கையை நீட்டினன்.

(ii) கருணையப்பர் அக்காசைப் பெற்றுக் கொள்வாரா?

(iii) ஒரு நாள் அவனுக்கு வெகுமதி அளிக்க எண்ணினர்.

# 7. பாரத தேசம்



வெள்ளிப் பனிமலையின்
மீதுலவுவோம்—அடி
மேலைக் கடல்முழுதுங்
கப்பல் விடுவோம் ;

பள்ளித் தலமனைத்துங்
கோயில் செய்குவோம்
—எங்கள்
பாரத தேசமென்று
தோள் கொட்டுவோம்.





சிங்களத் தீவினுக்கோர்
பால மமைப்போம் ;
சேதுவை மேடுறுத்தி
வீதி சமைப்போம் ;

வங்கத்திலோடிவரும்
நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற்
பயிர் செய்குவோம்.





ஆயுதம் செய்வோம்
நல்ல காகிதம் செய்வோம்;
ஆலைகள் வைப்போம்
கல்விச் சாலைகள் வைப்
[போம் ;

ஓயுதல் செய்யோம்
தலை சாயுதல் செய்யோம்;
உண்மைகள் சொல்வோம்
பல வண்மைகள் செய்
[வோம்.

குடைகள் செய்வோம்
உழுபடைகள் செய்வோம்;
கோணிகள் செய்வோம்
இரும்பாணிகள் செய்
[வோம் ;

நடையும் பறப்பு முணர்
வண்டிகள் செய்வோம் ;
ஞாலம் நடுங்க வரும்
கப்பல்கள் செய்வோம்.



காவியஞ் செய்வோம்
நல்ல காடு வளர்ப்போம்;
கலை வளர்ப்போம்
கொல்லருலை வளர்ப்போம்;



ஓவியம் செய்வோம்
நல்ல ஊசிகள் செய்வோம்;
உலகத் தொழிலனைத்தும்
உவந்து செய்வோம்.

—பாரதியார்

| | | |
|---|---|---|
| பனிமலை | ஒயுதல் | ஞாலம் |
| பள்ளித்தலம் | வண்மை | காவியம் |
| சமைப்போம் | உழுபடை | ஓவியம் |
| மிகை | பறப்பு | உவந்து |

## கேள்விகள்

1. வெள்ளிப் பனிமலை என்பது எது?
2. மேலைக் கடல் எதைக் குறிக்கிறது?
3. எந்த நீரைக் கொண்டு மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்?
4. பாரத தேசத்தினர் செய்யப்போகும் தொழில்களில் ஐந்து சொல்லு.
5. நடையும் பறப்புமுணர் வண்டிகள் எவை?

# 8. மயில்



**தகப்பனுர்** :—செல்லமுத்து, உன் புஸ்தகத்திற்குள் என்னென்னவோ வைத்திருக்கிருயே ! புஸ்தகம் கிழிந்து போகாதா ?

**செ** :—என்னென்னவோ இல்லை அப்பா ; மயில் வைத்திருக்கிறேன். அது குட்டி போடும்.

**த** :—மயிலா ? குட்டியா ? நீ பேசுவதே வேடிக்கையாயிருக்கிறது. அது மயிலுமல்ல ; குட்டியும் போடாது.

**செ** :—பிள்ளைகள் எல்லாரும் மயில் என்று தானே சொல்லுகிருர்கள் அதை ! வேறு என்ன அப்பா, அது ?

த :—மயில் என்பது ஒரு பறவை; அது கோழி யின் இனத்தைச் சேர்ந்தது. அதன் தோகையில் உள்ள இறகில் ஒரு துண்டு இது.

செ :—மயில் எங்கே வசிக்கும்? அதன் தோகை எப்படி இருக்கும்?

த :—மயில் உஷ்ண தேசங்களில், சோலைகளில் வசிக்கும். அதன் பின்புறத்தில் தோகை அமைந்திருக்கும். பல இறகுகளின் சேர்க் கையே தோகையாகும்.

செ :—மயிலைப் பற்றி இன்னும் சொல்லுங்கள், அப்பா.

த :—சொல்லுகிறேன் கேள். உடல் அமைப் பில் மயில் கோழியைப் போலவே இருக் கும். ஆனால் உருவத்தில் கோழியைவிடச் சற்று பெரியது.

சாதாரணக் கோழிக்குத் தோகை இல்லை; மயிலுக்குத் தோகை உண்டு. அத்தோகையை அது சிலசமயம் விசிறியைப் போல் விரித்துக் கொண்டு ஆடும். மற்றவேளைகளில், தோகை சுருங்கி நீண்டு காணப்படும்.

த :—மயில் எப்போது ஆடும்? மயில் ஆடுவது அழகாய் இருக்குமா?

த :—கார் காலத்தில், மேகத்தைக் கண்டால் மயில் ஆடும். அதன் தோகையில் பல பெரிய புள்ளிகள் காணப்படும்; அவற்றைக் கண்கள் என்று சொல்வதுண்டு. மயிலின் இறகு பீலி எனப்படும்; அது மிருதுவும் அழகும் உடையது. மயிலின் தோகை பச்சை, நீலம், மஞ்சள், கறுப்பு, ஆகிய பல நிறங்களும் பொருந்திப் பளபளப்பாக இருக்கும். மயிலின் நடை ஒப்பாரமானது. அது ஆடுவது அழகாக இருக்கும்.

செ :—கார் காலத்தில் மேகத்தைக் கண்டால் மயில் ஏன் ஆட வேண்டும்?

த :—அப்போது குளிர்ந்த காற்று வீசும். குளிர்ந்த காற்றில் மயிலுக்கு மகிழ்ச்சி அதிகம். ஆகையால் அப்போது அது ஆடுகிறது.

செ :—மயிலின் உணவு என்ன ?

த :—பூச்சி, புழுக்களே மயிலுக்கு முக்கிய உணவு. வளர்ப்பவர்கள் அதற்குத் தவிட்டையும் உணவாக வைப்பார்கள்.

செ :—மயிலை மனிதர்கள் வளர்ப்பது கூட உண்டா ? அதனுல் மனிதருக்கு என்ன உபயோகம் ?

த :—அழகுக்காகச் சிலர் மயிலை வளர்ப்பார்கள். வேடர்கள் மயில்களைப் பிடித்து, அவற்றின்

தோகை இறகுகளைப் பிடுங்கி விற்பார்கள். அவற்றால் அழகான விசிறிகள் கட்டலாம். மயில் இறகின் அடிப்புறம் மருந்துக்கு உதவும். சிலர் மயிலின் இறைச்சியைத் தின்பார்கள்.

| | | |
|---|---|---|
| என்னென்னவோ | தோகை | கார் காலம் |
| உஷ்ணதேசம் | அமைப்பு | அடிப்புறம் |
| ஒய்யாரம் | மேகம் | இறைச்சி |
| உபயோகம் | வேடர் | பீலி |

## கேள்விகள்

1. மயில் எந்த இனத்தைச் சேர்ந்தது ?
2. மயில் எப்போது ஆடும் ? ஏன் ?
3. மயிலின் உணவு என்ன ?

## பயிற்சி

1. கீழேயுள்ள வார்த்தைகளை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :

உபயோகம், கார்காலம், ஒய்யாரம்.

2. கோடிட்ட இடங்களில் சரியான வார்த்தைகளை எழுது :

(i) மயில் ——— இனத்தைச் சேர்ந்தது.
(ii) மயிலின் இறகு ———எனப்படும்.
(iii) மயில்———காலத்தில் மேகத்தைக் கண்டால் ஆடும்.

3. இந்தப் பாடத்தில் முதல் ஐந்து வரிகளிலிருக்கும் பெயர்ச் சொற்களை எழுது.

# 9. திரிசிரா மலை



திரிசிராப்பள்ளி ஒரு பழமையான தலம். இவ்வூரின் மத்தியில் ஒரு குன்று விளங்குகிறது. அதற்குத் தாயுமானவர் மலை, அல்லது திரிசிரா மலை என்று பெயர். அது முற்றிலும் கற்பாறையாலானது. வேறு பல குன்றுகளைப் போல் விகாரமாக இல்லை. இம்மலை அழகிய உருவம் உடையது. இதன் உயரம் இருநூற்று ஐம்பது அடி; சுற்றளவு சுமார் ஒரு மைல் இருக்கும்.

இக்குன்றின்மீது ஒரு சிறந்த கோவில் இருக்கிறது. அதற்குத் தாயுமானவர் கோவில் என்று பெயர். பல்லவ மன்னர்கள் அக்கோயி

லைக் கருங்கற்களால் கட்டியிருக்கிறார்கள். கருங்கற்பாறையைப் பலவிடங்களில் குடைந்தும், சுற்றிலும் கருங்கல் மதில்களை எழுப்பியும் கோவில் அமைக்கப்பட் டிருக்கிறது. இதனால் நம் முன்னோர்களின் சிற்பத்திறமை விளங்குகிறது. மலையின் மேல் செல்வதற்கு அழகான படிகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

மலையைச் சுற்றி நான்கு உள் வீதிகளும், நான்கு வெளி வீதிகளும் அமைந்துள்ளன. வெளிவீதிகள் தேரோடும் வீதிகள். உள்வீதிகள் மிக மேடாக இருக்கின்றன. உள்வீதிகளைச் சுற்றி நான்கு பக்கங்களிலும் மதிற்சுவர்கள் உள்ளன. இவையும் கருங்கற்களால் ஆனவை. விசுவநாத நாயக்கர் என்ற அரசர் இச் சுவர்களைக் கட்டினார் என்பர்.

மலையின் உச்சியில் ஒரு விநாயகர் கோவில் இருக்கிறது. அதற்கு உச்சிப் பிள்ளையார் கோவில் என்று பெயர். முஸ்லிம் பெரியார் ஒருவர் இம் மலையில் தங்கியிருந்தாராம். அதனால் முஸ்லிம்களும் இம்மலையைக் கொண்டாடுகிறார்கள்.

குன்றின் மீது ஏறிச் சுற்றிலும் பார்த்தால் வெகுதூரத்தில் உள்ள இடங்கள் தெரியும். நகரத்திலுள்ள ஆயிரக்கணக்கான வீடுகளும் பார்க்க வெகு அழகாயிருக்கும். காவிரியும்,

கொள்ளிடமும், ரயில்பாதைகளும், சாலைகளும், கோபுரங்களும், வயல்களும் ஆகிய காட்சிகள் கண்ணைக் கவரும். ஆங்காங்கு நடக்கும் ஜனங்களும், ஓடும் வண்டிகளும் மிகச் சிறுத்துத் தெரியும். மலையின் ஒரு புறத்தில் ஒரு மணிக்கூண்டும் கட்டப்பட்டிருக்கிறது. தினமும் குறிப்பிட்ட நேரங்களில் அம்மணி அடிக்கப்படும். அதன் ஒலி வெகுதூரம் கேட்கும்.

திரிசிராப்பள்ளிக்கு இம்மலையே ஓர் சிறப்பு. வெளியூரார் பலர் இதனைக் காண வருவர். இதன் அழகும், சிற்பமும் கண்கவர்பவை.

| | | |
|---|---|---|
| **தலம்** | **கண்ணைக்கவரும்** | **தேரோடும்வீதி** |
| **கோபுரம்** | **மணிக்கூண்டு** | **உள்வீதி** |
| **மதில்** | **சிற்பம்** | **வெளிவீதி** |
| **குன்று** | **வெளியூரார்** | |

### கேள்விகள்

1. திரிசிரா மலைக்கு மற்றொரு பெயர் என்ன?
2. இது பார்வைக்கு எவ்வாறு காணப்படுகிறது?
3. மலையிலுள்ள கோயில் யாரால் கட்டப்பட்டது?

### பயிற்சி

1. பொருள் கூறு:
   தலம், கண்ணைக்கவரும், வீதி.
2. எதிரான அர்த்தமுள்ள வார்த்தைகளைச் சொல்லு:
   பழமையான, உயரம், உள்வீதி.

3. (i) மரம் **வளர்கிறது**.
   (ii) மயில் **ஆடுகிறது**.
   (iii) ராமன் **படிக்கிறான்**.

மேல் வாக்கியங்களில் தடித்த எழுத்திலுள்ள வார்த்தைகளைக் கவனி. 'மரம் என்ன **செய்கிறது?**' என்ற கேள்விக்கு '**வளர்கிறது**' என்று விடை கிடைக்கிறது. 'வளர்கிறது' என்ற வார்த்தை வினைச்சொல் என்ற வகையைச் சேர்ந்தது. இதைப் போலவே **ஆடுகிறது, படிக்கிறான்** என்ற வார்த்தைகளும் வினைச்சொற்களாகும்.

இப்பாடத்தின் முதல் பிரிவிலுள்ள வினைச்சொற்களை எழுது.

# 10. அப்பாஜியின் புத்திகூர்மை

சுமார் ஐந்நூறு ஆண்டுகளுக்குமுன் **விஜய நகரம்** என்னும் ஓர் ஊர் இருந்தது. அங்கே **கிருஷ்ணதேவராயர்** என்ற அரசர் ஆண்டு வந்தார். அவருக்கு **அப்பாஜி** என்ற ஒரு மந்திரி இருந்தார். அவர் மிகவும் நுண்ணிய அறிவு உள்ளவர்.

அக்காலத்தில் விஜயநகரத்தில் ஒரு பிரபு இருந்தார். அவரிடம் பதினேழு குதிரைகள் இருந்தன. அவருக்கு மூன்று பிள்ளைகள் உண்டு. சாகுந்தறுவாயில் அவர் தமது பிள்ளைகளை அழைத்து, தமது சொத்தை அவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்தார். குதிரைகளை அவர்கள்

பங்கிடுவது பற்றி அவர் ஓர் ஏற்பாடு செய்தார். அதன்படி மூத்தவன் மொத்தம் உள்ள குதிரைகளில் பாதிப் பங்கை அடைய வேண்டும்; இரண்டாமவன் மூன்றில் ஒரு பங்கு அடைய

வேண்டும்; மூன்றுமவன் ஒன்பதில் ஒரு பங்கு அடையவேண்டும்.

தந்தை இறந்தபின் குமாரர்கள் தங்கள் தங்களுக்கு உரிய சொத்தை எடுத்துக்கொள்ளத் தொடங்கியபோது, குதிரைகளைப் பங்கிட்டு எடுத்துக் கொள்ள முடியவில்லை. இதைக் குறித்து அவர்கள் மந்திரி அப்பாஜியிடம் முறையிட்டுக் கொண்டார்கள். அவர் சிறிது யோசித்துவிட்டு,

அவர்களுடையகுதிரைகளை எல்லாம் வரிசையாக ஓரிடத்தில் நிறுத்தி வைக்கும்படி சொன்னார். பிறகு தமது குதிரையையும் அவற்றோடு சேர்த்து நிறுத்திவைக்கச் சொன்னார். பிறகு அக்குமாரர் களைப் பார்த்து "உங்கள் தகப்பனார் கூறியபடி குதிரைகளைப் பங்கிட்டு எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார்.

இதைக் கேட்ட அக்குமாரர்கள் அப்பாஜி யினுடைய குதிரையும் தங்களுக்குக் கிடைக்கும் என்று எண்ணிச் சந்தோஷித்தார்கள். பிறகு மூத்தவன் தனக்குரிய பாதிப் பங்காகிய ஒன்பது குதிரைகளை எடுத்துக் கொண்டான். இரண்டா மவன் தனக்குரிய மூன்றில் ஒரு பங்கு ஆகிய ஆறு குதிரைகளை எடுத்துக்கொண்டான். மூன் றுமவன் தனக்குரிய ஒன்பதில் ஒரு பங்கு ஆகிய இரண்டு குதிரைகளை எடுத்துக்கொண்டான். பிறகு மீதியிருந்த ஒரு குதிரையாகிய தன் குதிரையின் மீது அப்பாஜி ஏறிக்கொண்டு சென்றார்.

இதைப் பார்த்த அந்தப் பிள்ளைகள் மந்திரி யினுடைய புத்திசாலித்தனத்தைக் கண்டு ஆச்ச ரியப்பட்டனர். அவர்கள் தங்களுக்கு முறைப்படி பங்கு கிடைத்ததைப்பற்றிச் சந்தோஷப் பட் டார்கள். தம் தகப்பனாருடைய ஏற்பாட்டையும் மெச்சிக்கொண்டார்கள்.

| | |
|---|---|
| ஆண்டுகளுக்கு | எடுத்துக்கொண்டான் |
| குமாரர்கள் | சந்தோஷித்தார்கள் |
| சாகுந்தறுவாயில் | சொத்தை |
| நுண்ணிய | பங்கிட்டுக்கொள்ள |
| புத்திசாலித்தனம் | முறையிட்டுக்கொண்டார்கள் |
| மெச்சிக்கொண்டார்கள் | யோசித்துவிட்டு |

## கேள்விகள்

1. அப்பாஜி என்பவர் யார்? அவர் எங்கே இருந்தார்?

2. அப்பாஜி தன் குதிரையையும் வரிசையில்நிறுத்திய போது பிள்ளைகள் என்ன நினைத்தார்கள்?

3. அப்பாஜி குதிரைகளைப் பங்கிட்டவிதம் எப்படி?

## பயிற்சி

1. பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமைத்துச் சொல்லு :—

முறையிடு, மெச்சு, யோசி, பங்கிடு.

2. இப்பாடத்தின் முதல் பிரிவிலுள்ள வினைச் சொற்களை எழுது.

3. பின்வரும் சொற்களில் எவை பெயர்ச்சொற்கள், எவை வினைச் சொற்கள்?

அரசர், பிள்ளை, செய்தான், ஓடுகிறது, வரிசை, நின்றான்.

# 11. திருவிழாக்கள்

அநேகமாக எல்லா ஊர்களிலும் திரு விழாக்கள் உண்டு. திருவிழா என்பது ஒரு கொண்டாட்டம். பெரும்பாலும் திருவிழாக்கள் கோவில்கள் சம்பந்தமாகவே நடத்தப்படும். கிராமங்களில் திருவிழாக்கள் வெகு கட்டுப்பாடாக நடைபெறும். ஊரார் எல்லாரும் அதில் பங் கெடுத்துக் கொள்வார்கள். ஒரு கிராமக் கோவி லில் திருவிழா நடைபெற்றால், பக்கத்து ஊர்களி லுள்ளவர்களும் அதைப் பார்க்கச் செல்வார்கள். கிராமவாசிகள் தங்கள் உறவினர்களையும் திரு

விழாவிற்கு வரவழைத்து அவர்களுக்கு விருந்து செய்வார்கள்.

தெருக்கள் வெகு அழகாக அலங்கரிக்கப் படும். வீடுகளெல்லாம் கலியாண வீடுகள் போல் மங்களமாக விளங்கும்.

சில பெரிய நகரங்களில் திருவிழாக்கள் வெகு விமரிசையாக நடைபெறும். தூரத்தி லுள்ள வெளியூர்களிலிருந்து ஜனங்கள் திரளாக வருவார்கள். வெளியூர்களிலிருந்து அநேக வியாபாரிகள் கடைகளைக் கொண்டு வருவார்கள். வேடிக்கைகள், சங்கீதக் கச்சேரிகள், படக்காட்சி, கூத்து, பிரசங்கம் முதலியனவும் நடைபெறும். ஒரே இடத்தில் பலவகைப் பாத்திரங்கள், துணி மணிகள், கண்ணாடிச் சாமான்கள், மரச் சாமான் கள், நகைகள், நாகரிகப் பொருள்கள் முதலிய வைகளைக் கடைகளில் அணி அணியாகப் பார்க்கலாம். வெவ்வேறு இடங்களில் வசிப்பவர் களையும் ஒரே இடத்தில் திரளாகக் காண்பது அழகாக இருக்கும். நாலாபக்கங்களின் நாகரிகங் களையும் திருவிழாக்களால் அறியக்கூடும்.

திருவிழாக்களால் ஏற்படும் பயன்கள் யாவை? மக்களுள் ஒற்றுமையும் நேசமும் பலப் படும். தொழில்கள் விளம்பரம் பெறும். ஆனால் திருவிழாக்களை நல்ல முறையில் நடத்த வேண்

டும். கலகக்காரர்களும் திருடர்களும் திருவிழாக்களில் கலந்து கொள்ளாமல் பாதுகாக்க வேண்டும்.

இக்காலத்தில் சங்கங்கள், வாசக சாலைகள், பள்ளிக்கூடங்கள் முதலிய இடங்களிலும் முக்கியமான நாட்களில் விழாக்கள் கொண்டாடப்படும். பெரியார்களின் ஞாபகார்த்தமாகவும் விழாக்கள் நடைபெறுகின்றன. பெரியார்களின் திருவிழாக்களால், அவர்களுடைய சிறந்த தன்மைகள் நமது மனத்தில் பதியும். நாமும் சிறப்படைய வேண்டும் என்ற எண்ணமும் ஏற்படும்.

| | | |
|---|---|---|
| அநேகமாக | காட்சிகளை | நாலாபக்கம் |
| திருவிழா | விளம்பரம் | ஞாபகார்த்தம் |
| பெரும்பாலும் | நாகரிகம் | கலகக்காரர்கள் |
| கொண்டாடப்படும் | திரளாக | பதியும் |
| கட்டுப்பாடாக | படக்காட்சி | சிறப்பு |
| விமரிசையாக | கூத்து | பெரியார் |
| வெளியூர் | பிரசங்கம் | |

## கேள்விகள்

1. திருவிழா என்பது என்ன ?
2. திருவிழாக்களை எந்த வகையில் கொண்டாட வேண்டும் ?
3. இக்காலத்தில் எந்தெந்த இடங்களில் விழாக்கள் கொண்டாடப் படுகின்றன ?

### பயிற்சி

1. கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமைத்து எழுது :

(i) ஊரார் எல்லோரும் —— பங்கெடுத்துக் கொள்வார்கள்.

(ii) பெரியோர் ஞாபகார்த்தமாகவும் —— நடைபெறுகின்றன.

2. மரம் வளர்கிறது.
மரங்கள் வளர்கின்றன.

இந்த இரண்டு வாக்கியங்களுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கவனி. 'மரம்' என்ற வார்த்தை ஒரு மரத்தைக் குறிக்கிறது. 'மரங்கள்' என்ற வார்த்தை ஒன்றுக்கு மேற்பட்ட (பல) மரங்களைக் குறிக்கிறது. 'மரம்' என்பது ஒருமைச் சொல் ; மரங்கள் பன்மைச் சொல். 'வளர்கிறது' என்ற வினைச் சொல் ஒருமை. 'வளர்கின்றன' என்ற வினைச்சொல் பன்மை.

3. இந்தப் பாடத்தின் முதல் ஐந்து வரிகளிலுள்ள பெயர்ச் சொற்களை எழுதி ஒருமை பன்மைகளைக் குறிப்பிடு.

## 12. அறிவில்லாதவர் நட்பு கூடாது

மலையையடுத்துள்ள ஒரு சிறு நாட்டை மதியிலி என்றோர் அரசன் ஆண்டு வந்தான். அவன் "யாரை நம்பக் கூடும், யாரை நம்பக் கூடாது" என்ற பகுத்தறிவு இல்லாதவன்.

அறிவு இல்லாதவர்களுடன் நட்புக் கொள்ள ஆரம்பித்தான்.

அவனைப் பாதுகாப்பதற்கு உண்மையும், யூகமுமுடைய மெய்க்காவலர்கள் இருந்தார்கள். அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது அதிகச் செலவு என்று எண்ணினான். அச்



செலவைக் குறைக்க யாது வழி யெனச் சிந்தித்தான். அவர்களை வேலையிலிருந்து நிறுத்தி அவர்களுக்குப் பதிலாகச் சில குரங்குகளைப் பிடித்து வந்து, அவைகளையே தனக்கு மெய்க்காவலாகப் பழக்கி வந்தான். குரங்குகளுக்குச் சம்பளம் கொடுக்க வேண்டியதில்லை அல்லவா!

அக் குரங்குகள் எப்போதும் வாளுங் கையுமாக அரசன் அருகிலேயே சூழ்ந்திருக்கும். அரசனைப் பார்க்க விரும்புவோர் சிறிது தூரத்திலேயே எச்சரிக்கையாக இருப்பர்.

இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் அரசனுக்குத் தூக்கம் வந்தது. வாளொடு கூடிய குரங்கொன்றைத் தன் அருகே இருக்கும்படி உத்தரவிட்டான். “நான் தூங்கிக் கொண்டிருக்கும்போது யாராவது வந்து என்னைத் தொட்டால், உடனே அவர்களை வெட்டிவிடு” என்று அதற்குக் கட்டளையும் இட்டான். பிறகு அரசன் அயர்ந்து தூங்கி விட்டான்.

அரசன் தூங்கிக் கொண்டிருக்கையில் ஓர் ஈ அவன் கழுத்தின் மேல் வந்து உட்கார்ந்தது. அதைக் கண்டதும் குரங்கு, தன் கையிலிருந்த வாளால் அந்த ஈயை ஒரே வெட்டாக வெட்டிற்று. ஈயுடன் அரசனுடைய கழுத்தும் துண்டாயிற்று. ‘ஈயை வெட்டினல் அரசனும் சாவானே’ என்பது குரங்கிற்குத் தெரியுமா ?

அறிவில்லாத குரங்கைத் தனக்கு மெய்க் காவலாக அரசன் ஏற்படுத்தினன். முடிவில் அவனுடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தது.

| | | |
|---|---|---|
| அடுத்துள்ள | நம்பக்கூடும் | நம்பக்கூடாது |
| பகுத்தறிவு | இவ்வாறு | எச்சரிக்கையாக |
| சூழ்ந்திருக்கும் | கட்டளை | வெட்டிற்று |
| அரண்மனை | வீண் செலவு | வெகு நாளாகவே |
| தொட்டால் | மெய்க் காவலர் | பாதுகாப்பதற்கு |
| வாளுங்கையுமாக | உத்தரவிட்டான் | முடிவில் |

## கேள்விகள்

1. மதியிலி எவ்வித யோசனை இல்லாதவன்?

2. யாரை அவன் வேலையிலிருந்து நீக்கினான். ஏன் அவன் அவ்வாறு செய்தான்?

3. அவனுடைய உயிருக்கு ஏன் ஆபத்து நேர்ந்தது?

## பயிற்சி

1. எதிர்ப் பதங்கள் எழுது:
நட்பு, உண்மை, சாவான்.

2. உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி :
கட்டளை, வீண் செலவு, பகுத்தறிவு.

3. கீழ்க் கண்ட வார்த்தைகளில் ஒருமை, பன்மை பிரித்துக் கூறு :

மலை, காடுகள், புத்தகங்கள், அவை, ராமன், மாணவர், அது.

4. பின் வரும் வாக்கியங்களில் ஒருமைக்குப் பதில் பன்மை உபயோகி :

(i) நாய் ஓடுகிறது.
(ii) ஆசிரியர் கற்பித்தார்.
(iii) மாணவன் படிப்பான்.

# 13. ஆலமரம்

பிள்ளைகளே ! உங்களில் அநேகர் ஆலமரத்தைப் பார்த்திருப்பீர்கள். நமது நாட்டில் காணப்படும் பலவகை மரங்களுள் ஆலமரம் மிகப் பெரியது. ஆலமரத்தின் கிளைகளிலிருந்து விழுதுகள் தொங்கும். விழுதுகள் நாளடைவில் பூமிக்குள் இறங்கி ஊன்றிவிடும். பிறகு அவையும் அடிமரம் போல் பருத்துவிடும். முற்றிலும் வளர்ந்த ஆலமரமானது பல தூண்களோடு கூடிய மண்டபம் போல் காட்சி தரும். ஆகையால் ஆலமரத்தின் அடியில் பரந்த நிழல் இருக்கும்.

வழிப் போக்கர்கள் ஆலமரத்தின் அடியில் நிழலுக்காகத் தங்குவார்கள். நூற்றுக் கணக்கான மக்கள் அதன் அடியில் தங்கலாம்.

இவ்வளவு பெரிய ஆலமரம் எவ்வாறு வளர்கிறது? அதன் பழங்களைப் பார்த்திருக்கிறீர்களா? அது வேப்பங்கனியின் அளவு பருத்திருக்கும்; மேற்புறம் சிவப்பு நிறமாக இருக்கும்; அதனுள் பல விதைகள் இருக்கும். அவ்விதைகள் உருவில் மிகச் சிறியவை.

கிளிகளும், காகங்களும் ஆலம்பழங்களை வெகு பிரியமாகத் தின்னும். அப் பழங்களைத் தின்றபின், அவை உமிழும் எச்சத்திலிருந்து சிறு விதைகள் பல இடங்களில் விழுந்து பூமியில் பதியும். அவ் விதைகளிலிருந்து தோன்றும் மரமே இவ்வளவு பெரிதாக ஆகின்றது. மிகச் சிறு அளவையுடைய ஆலம் விதையின் வல்லமையைப் பார்த்தீர்களா!

இதனல் நாம் அறியும் உண்மை யாது? நாம் எவரையும் உருவத்தைக் கொண்டு மதிக்க முடியாது. உருவத்திற் சிறியவர்களா யிருப்பவர்களும் செய்கையில் பெரியவர்களாய் இருப்பதுண்டு.

| | | |
|---|---|---|
| விழுதுகள் | ஊன்றிவிடும் | காட்சி தரும் |
| பரந்த | உமிழும் | எச்சம் |
| மதிக்க | செய்கை | பதிந்து |
| பருத்துவிடும் | வழிப் போக்கர் | தங்குவார்கள் |
| வேப்பங்கனி | மேற்புறம் | |

## கேள்விகள்

1. ஆலமரம் எதிலிருந்து முளைக்கிறது?
2. வளர்ந்த ஆலமரம் எவ்வாறு காட்சி தரும்?
3. ஆலமரம் வழிப்போக்கர்களுக்கு எவ்வாறு உதவுகிறது?

## பயிற்சி

1. எதிர்ப் பதங்கள் எழுது:—
   பரந்த, மேற்புறம், முடியாது.

2. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைத்து எழுது:—
   (i) ஆலமரத்தின் கிளைகளிலிருந்து —— தொங்கும்.
   (ii) ஆலமரத்தின் அடியில் —— நிழல் இருக்கும்.
   (iii) ஆலம் விதைகள் உருவில் ——.

3. கீழேயுள்ள வாக்கியங்களில் பன்மைக்குப் பதில் ஒருமை உபயோகி:
   (i) விதைகள் உருவில் சிறியவை.
   (ii) வழிப்போக்கர்கள் நிழலில் தங்குவார்கள்.
   (iii) கிளிகளும், காகங்களும் ஆலம்பழங்களை வெகு பிரியமாகத் தின்னும்.

# 14. சுட்டபழமும் சுடாதபழமும்

ஔவைப் பிராட்டியைப்பற்றி நீங்கள் அறிவீர்கள். ஔவையார் கல்வியிற் சிறந்த ஓர் அம்மையார். ஏழைகளிடத்தில் ஔவையாருக்குப் பிரியம் அதிகம். அவர் பொருளில் ஆசை இல்லாதவர். பசிக்குக் கூழ் கொடுத்தாலும் ஒரு பாட்டைப் பாடுவார். சிறுவர், சிறுமிகள் படிப்பதற்குத் தக்கபடி பல நூல்களை ஔவையார் அருளிச் செய்திருக்கிறார்; பெரியவர்கள் படிக்கக் கூடிய நூல்களையும் அவர் இயற்றி யிருக்கிறார். ஔவையாரின் நூல்களை யாவரும் விரும்பிக்

கற்பர். "ஔவையார் வாக்கு அமுத வாக்கு" என்பது பழமொழி.

ஔவையார் ஒருநாள் ஒரு சாலையின்வழியே சென்று கொண்டிருந்தார். அந்தச் சாலையின் இருபக்கங்களிலும் மரங்கள் வரிசையாக வளர்ந்திருந்தன. அவற்றின் இடையே பல நாவல் மரங்களும் இருந்தன. அப்போது ஆவணி மாதம். ஆதலால் அந்த நாவல் மரங்களில் பழங்களும், காய்களும் தளதளவென்று காணப்பட்டன. அப் பழங்களைக் கண்ட ஔவையார், அவற்றில் சிலவற்றைத் தின்ன வேண்டும் என்று விரும்பினர்.

ஔவையார் வயது முதிர்ந்தவர்; மரங்களின் மேலே கிளைகளில் உள்ள பழங்களை எவ்வாறு பறிக்க முடியும்! யாராவது இருக்கிறார்களா வென்று சுற்றிலும் பார்த்தார்; மேலே அண்ணாந்து நோக்கினர். மரக்கிளை ஒன்றின் மேல் ஓர் இடைப்பையனைக் கண்டார்; அவன் பழங்களைப் பறித்துப் பறித்துத் தின்று கொண்டிருந்தான்.

ஔவையார் அவனைப் பார்த்துத் தனக்குச் சில பழங்களைப் பறித்துப் போடும்படி கேட்டார். அதற்கு அவன், "பாட்டி, சுட்ட பழம் வேண்டு

மா? சுடாத பழம் வேண்டுமா?" என்று கேட்டான். ஔவையார் திகைத்தார். "பழங்கள் சுடுவது ஏது? இவன் கூறுவது வேடிக்கையாக இருக்கிறதே! இவன் எவ்வாறு பொருள்கொண்டு கூறினுன் என்று தெரியவில்லையே!" என்று தமக்குள்ளே யோசித்தார். பிறகு அவனைப் பார்த்து, "பையா, சுட்ட பழங்கள் சில போடு" என்ருர்.

உடனே அச்சிறுவன் கனிந்த பழங்கள் சிலவற்றைக் கீழே போட்டான். அவற்றில் மண் ஒட்டிக்கொண்டது. ஔவையார் அவற்றிலிருந்த மண்ணை ஊதி அகற்றினுர். அதைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவன் "பாட்டி, பழம் சுடப் போகிறது; நன்ருக ஊது" என்று கூறி நகைத்தான்.

சுட்ட பழம் என்ருல் கனிந்த பழம் என்று ஔவையார் தெரிந்து கொண்டார். "புலமை மிகுந்த எனக்கு இச்சொல்லின் பொருள் விளங்கவில்லையே! புத்தகப் படிப்பை அறியாத இடைச் சிறுவன் 'சுட்ட பழம்' என்பதன் பொருளைத் தெரிவித்தான். ஆகையால் ஊரார் பலருடன் பழகப் பழக, அறிவு வளர்ச்சி அடையும்" என்று அவர் தமக்குள் சொல்லிக்கொண்டார்.

| | | |
|---|---|---|
| ஔவைப் பிராட்டி | கூழ் | ஒட்டிக்கொண்டது |
| அம்மையார் | நாவல் மரம் | புத்தகப்படிப்பு |
| அருளிச் செய்து | அண்ணாந்து | பழகப் பழக |
| இயற்றி | திகைத்தார் | அல்லும் பகலும் |
| அமுதவாக்கு | வேடிக்கை | பொருள் |

## கேள்விகள்

1. இடைப்பையன் என்ன செய்து கொண்டிருந்தான்?

2. சிறுவன் ஔவையாரைப் பார்த்து என்ன கேட்டான்?

3. அறிவு எப்போது வளர்ச்சி அடையும்?

## பயிற்சி

1. கீழ்க் கண்ட வார்த்தைகளை வாக்கியங்களில் உபயோகி:

இயற்றினார், அண்ணாந்து, திகைத்தார்.

2. எதிரான அர்த்தமுள்ள வார்த்தைகளைக் கூறு:—

ஏழை, இருக்கிறது, பார்த்து.

3. கீழேயுள்ள வாக்கியங்களில் ஒருமைச் சொல்லுக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையுமாக மாற்றி எழுது:

(i) மாணவர்கள் ஓடுகிறார்கள்.

(ii) புலி மானைத் துரத்துகிறது.

# 15. ஆறு

கல்லும் மலையும் குதித்து வந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்து வந்தேன்.

கட்டும் அணையேறிச் சாடிவந்தேன்—அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன் ;
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன்—மடைச்
சீப்புகள் மோதித் திறந்து வந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றி வந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன் ;

ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்
—அங்கென்
ஆசைதீர விளையாடி வந்தேன்.

ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பி வந்தேன் ;
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

அல்லும் பகலும் அலைந்து வந்தேன்—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன் ;
நில்லும் எனிக்கினி நேரமில்லை—இன்னும்
நீண்டவழி போக வேண்டும் அம்மா.
—தேசிகவிநாயகம் பிள்ளை

| | | |
|---|---|---|
| ஆழி | எல்லை | மடை |
| இறைவன் | விரிந்த | மோதி |
| ஆற்றி | தவழ்ந்து | அழல் |
| ஆயும் | சாடி | பொழில் |
| கடந்து | கண்ணறை | ஊற்று |

## கேள்விகள்

1. ஆறு மலையில் எப்படி வந்தது? சமவெளியில் எப்படி வந்தது?
2. குளங்களிலும் ஏரிகளிலும் ஆறு எப்படிப் பாய்ந்து வந்தது?
3. ஆறு பாய்ந்ததால் சமவெளியில் ஏற்பட்ட இரண்டு மாறுதல்களைச் சொல்லு.

# 16. ஆகாய விமானம்



பிள்ளைகளே, ஆகாய விமானத்தை நீங்கள் பார்த்திருப்பீர்கள். மனிதர் ஆகாயத்தின் வழியாகப் பிரயாணம் செய்வதற்கு உபயோகப்படும் ஒருவகை வாகனம் அது. அது எப்படி அமைந்திருக்கிறது ! பார்வைக்கு அது ஒரு பறவையைப் போல் இருக்கிறது அல்லவா! பறவைக்கு இருப்பது போலவே அதற்கும் இரண்டு இறக்கை போன்ற பாகங்கள் உள்ளன. உடலும் பறவையைப்போலவே அமைந்திருக்கிறது. பறவையின் பாதம் போல் அதற்கு இரண்டு சக்கரங்கள் அமைந்துள்ளன. ஆகாய விமானம் பூமியின் மேல் செல்லுவதற்கு இந்தச் சக்கரங்கள் உபயோகப்படும்.

ஆகாய விமானங்களில் பலவகை உண்டு. அவைகளைப் படத்தில் பாருங்கள். அவை

இரட்டைச் சிறகு விமானம், ஒற்றைச் சிறகு விமானம், பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் விமானம், போர் புரிவதற்கு உரிய விமானம், குண்டு போடும் விமானம், கடல் விமானம்



முதலியன. இந்த விமானங்கள் ஆகாயத்தில் மணிக்குச் சுமார் 200 மைல் வீதம் செல்லும். தூரதேசங்களுக்குத் தபாற்கடிதங்களைச் சீக்கி

ரத்தில் கொண்டு செல்வதற்கு ஆகாய விமானம் மிகவும் ஏற்றது. மனிதர் தூரதேசப் பிரயாணம் செய்ய வேண்டுமானாலும், இதன் மூலம் சீக்கிரம் போய்ச் சேரலாம்.

ஆகாய விமானம் கண்டுபிடிக்கப்பட்டுச் சுமார் நாற்பது வருஷங்களே ஆகின்றன.



ஆனால் மனிதர் நீண்ட காலமாகவே ஆகாயத்தில் பறக்க முயற்சி செய்து வந்திருக்கின்றனர். முதல் முதல் புகைக் கூண்டு கண்டுபிடிக்கப்பட்டது. அது ஆகாயத்தில் காற்று வீசும் பக்கமாகவே செல்லும். மேலும் மனிதர் தம் இஷ்டப்படி குறித்த திசையில் குறித்த வேகத்தில் அதைச் செலுத்த முடியாது. பறக்கும் முயற்சிக்கு அது பயன்படவில்லை. அப்பால் நீண்ட காலம் அறிஞர் பலர் ஆராய்ச்சிகள் செய்து தற்போது உள்ள ஆகாய விமானங்களைக் கண்டுபிடித்தனர்.

| | | |
|---|---|---|
| ஆகாய விமானம் | ஒற்றை | தூரதேசங்கள் |
| ஆராய்ச்சி | குறித்த திசை | நீண்டகாலமாய் |
| இரட்டை | குறித்த வேகம் | பிரயாணம் |
| இறக்கை | சுமார் | புகைக்கூண்டு |
| ஏற்றது | தற்போது | விமானம் |

## கேள்விகள்

1. ஆகாய விமானம் எதைப்போல் அமைந்துள்ளது?
2. ஆகாய விமானத்தின் வகைகளைக் கூறு.
3. ஆகாய விமானத்தின் முக்கிய உபயோகங்கள் என்ன?

## பயிற்சி

1. கீழ்க்கண்ட வார்த்தைகளை வாக்கியங்களில் உபயோகி:

ஆராய்ச்சி, ஏற்றது, பிரயாணம்.

2. பின்வரும் சொற்களைப் பெயர்ச் சொல், வினைச் சொல் என்று பிரித்து எழுது:

பெண், வீடு, பறக்கிறது, ஓடுகிறார்கள், மனிதர், வந்தது, சாப்பிடு, வேடன்.

3. கோடிட்ட இடங்களில் பெயர்ச் சொற்களை அமைத்துப் படி:

(i) ஆகாய — கண்டுபிடிக்கப்பட்டு, சுமார் நாற்பது — ஆகின்றன.

(ii) ஆகாய — ஒரு — போல் அமைந்துள்ளது.

# 17. பாரியின் கருணை



முன்னொரு காலத்தில் தமிழ் நாட்டில் **பாரி** என்றொரு அரசன் இருந்தான். அவன் ஆண்டு வந்த நாட்டிற்குப் **பரம்புநாடு** என்று பெயர். பரம்பு நாடு ஒரு மலை நாடு; காடுகளும் சோலைகளும் நிறைந்தது. அச் சோலைகளிலுள்ள செடிகளும், தருக்களும் பார்ப்பவர் கண்களைக் கவரும். பாரி மன்னன் அடிக்கடி அச் சோலைக்குச் செல்வான்; அங்குள்ள இயற்கையின் அழகைக் கண்டு மகிழ்வான்.

வழக்கம் போல் ஒரு நாள் அவன் ஒரு சோலையைக் கண்ணுறச் சென்றான். அங்கு

வளர்ந்திருந்த பூச் செடிகள் அவனுடைய கவனத்தை இழுத்தன. மலர்களின் மணம் அவனை மகிழச் செய்தது. அவற்றுள் ஒரு முல்லைக் கொடி இலைகள் தழைத்தும், மலர்கள் நிறைந்தும், பார்வைக்கு வெகு அழகாகக் காணப்பட்டது. அக் கொடி நாலா பக்கங்களிலும் பரவி ஓடுவதற்குப் பிடிமானம் போதாமல் வாடுவதையும் மன்னன் கண்டான்.

"இம் முல்லைக் கொடியும் ஓர் உயிர் தானே! இவ்வாறு இது படருவதற்கு இடமில்லாமல் வருந்துதல் கூடுமோ?" என்று சிந்தித்தான். தான் ஏறிவந்த தேரை அதற்கு ஆதரவாக நிறுத்தினன். பிறகு கால் நடையாகவே தன் அரண்மனைக்குச் சென்றான்.

பாரியின் கருணைதான் என்னே! தாவர இனமாகிய முல்லைக் கொடி வருந்துவதைக் கண்டு மன்னன் மனம் இரங்கினன். பறவை, விலங்கு முதலிய ஏனைய உயிர்களிடத்தில், எவ்வளவு கருணை உள்ளவனாக இருந்திருப்பான்! பகுத்தறிவு உடைய மனிதர்களை எவ்வளவு அருமையாகப் பாதுகாத்திருப்பான்!

பாரியின் பெருமையை யாவரும் புகழ்கிறார்கள். "கொடையிற் சிறந்த வள்ளல்" என்று அவன் போற்றப்படுகிறான்.

| | | |
|---|---|---|
| தரு | கண்ணுற | வாடுவது |
| கருணை | அருமையாக | படருவது |
| ஏனைய | பிடிமானம் | ஈகை |
| கொடை | வள்ளல் | பாதுகாத்து |

## கேள்விகள்

1. பாரி எந்த நாட்டை ஆண்டு வந்தான் ?

2. முல்லைக் கொடி எவ்வாறு வாடிற்று? அதற்கு மன்னன் என்ன உதவி செய்தான் ?

3. பாரியை யாவரும் எப்படிப் புகழ்கிறார்கள் ?

## பயிற்சி

1. எதிரான அர்த்தமுடைய வார்த்தைகளை எழுது: பெருமை, மகிழ்வான், கூடும்.

2. பின் வரும் வாக்கியங்களின் பகுதிகள் மாறி எழுதப்பட்டுள்ளன; அவற்றைச் சரியானபடி சேர்த்து எழுது :—

| | |
|---|---|
| (i) முல்லைக் கொடி | சோலைகளுக்குச் செல்வான். |
| (ii) பாரியின் பெருமையை | அழகாகக் காணப்பட்டது. |
| (iii) பாரி மன்னன் | யாவரும் புகழ்கிறார்கள். |

3. கோடிட்ட இடங்களில் வினைச் சொற்களைச் சேர்த்துப் படி :—

(i) தமிழ் நாட்டில் பாரி என்ற அரசன் ஒருவன் ——.

(ii) பூச் செடிகள் அவனுடைய கவனத்தை ——.

(iii) பாரி மன்னன் முல்லைக் கொடிக்கு மனம் ——.

# 18. காகிதம் சொல்லிய கதை



நான் ஒரு பரோபகாரி. உலகத்தில் என்னை அறியாதவர்கள் இல்லை. கோடீசுவரரும் என்னைத் தேடுகிருர்கள்; பிச்சைக்காரர்களும் என்னைத் தேடுகிருர்கள். அரசாங்கத்திலும் நான் முன்னே நிற்கின்றேன். நீதி மன்றங்களில் என்னை முன்னே வைத்துக் கொண்டே வழக்குகள் தீர்க்கப்படுகின்றன. கலைகள் பலவும் என்னிடத்தில் அடங்கியிருக்கின்றன.

இவ்வளவு பெருமைகள் பொருந்திய நான் சில சமயம் குப்பை மேட்டிலும் கிடப்பேன். சிறுவர்கள் என்னைப் பட்டம் கட்டிப் பறக்க

விடுவார்கள். கடைக்காரர்கள் என்னைக் கிழித்தும், ஒட்டியும், மடித்தும் சாமான்களைச் சுமக்கச் செய்வார்கள். நான் பொறுமையுடன் எல்லாருக்கும் ஊழியம் செய்கிறேன்.

இவ்வளவு கருத்தாக நீங்கள் என்னுடைய கதையைக் கேட்கிறீர்களே! என்னுடைய பிறப்பைப் பற்றி நீங்கள் அறிவீர்களா? பிறந்த இடத்தைக் கொண்டு என்னை யாரும் இழிவாக நினைக்கக் கூடாது. இழிவான இடத்தில் பிறந்தவர்களும் அரிய செய்கைகளால் பெரியவர்கள் ஆவார்கள். காட்டில் விளையும் புற்களும், வைக்கோலும், மூங்கிலும், மரப்பட்டைகளுமே எனக்குப் பிறப்பிடம்.

மேற்கூறிய பொருள்களைத் தாள் செய்தும், ஊறவைத்தும், வேகவைத்தும் நல்ல கூழ்போல் செய்வார்கள். பிறகு அந்தக் கூழைப் பரவலாகப் பரப்பி உலர்த்தினல் நான் என்னுடைய உருவத்துடன் விளங்குவேன். உழைப்பிற்கும் சேர்க்கைக்கும் தக்கபடி நான் நேர்த்தியாக ஆவேன்.

பண்டைக் காலத்தில் இந்நாட்டிலுள்ள குடிசைத் தொழிலாளிகளால் நான் வளர்ந்து வந்தேன். இக்காலத்தில் பெரிய எந்திரங்களின் மூலமாக நான் பெருகி வருகிறேன். பத்திரிகைகளும், புத்தகங்களுமாக நான் நாளுக்கு நாள்

பெருகுகிறேன். என்னால் தான் கோடிக் கணக்கான மக்கள் அறிவு பெறுகிறார்கள். மக்கள் தம் உறவினருக்கும், மற்றோருக்கும் செய்திகளை அறிவிக்க என்னைத் தூதாகத் தேடுகிறார்கள். பல அலங்கார வேலைகளுக்கும் உதவும்படி நான் பல வர்ணங்களிலும் விளங்குகிறேன். உண்மையில் நான் ஒரு பரோபகாரி அல்லவா?

| | | |
|---|---|---|
| **பரோபகாரி** | **வழக்கு** | **மரப்பட்டை** |
| **கோடீசுவரர்** | **சேர்க்கை** | **ஊழியம்** |
| **நீதிமன்றம்** | **பத்திரிகை** | **வேகவைத்து** |
| **அரசாங்கத்தார்** | **அலங்காரவேலை** | **ஊறவைத்து** |

### கேள்விகள்

1. காகிதம் செய்வதற்கு உபயோகப்படும் பொருள்கள் எவை?
2. காகிதம் எங்தெந்த வகைகளில் உபயோகப்படுகிறது?
3. முற்காலத்தில் காகிதம் யாரால் செய்யப்பட்டது? இக்காலத்தில் எவ்வாறு பெருகி வருகிறது?

### பயிற்சி

1. பின் வரும் வார்த்தைகளை உபயோகித்து வாக்கியங்கள் எழுது:

 பரோபகாரி, நீதிமன்றம், ஊழியம்.

2. பின் வரும் சொற்களுக்குப் பன்மை கூறு:
 மனிதன், செய்தி, அது, போகிறது, வருகிறான், சென்றது.
3. பின் வரும் சொற்களுக்கு ஒருமை கூறு:
 மாடுகள், அவை, நாங்கள், வளர்ந்தன, பெறுகிறார்கள், பழங்கள்.

# 19. கடிதம் எழுதுதல்

வேறு ஊர்களிலுள்ள நமது உறவினர்களுக்கோ, அல்லது சிநேகிதர்களுக்கோ நாம் ஏதாவது விஷயம் தெரிவிக்க வேண்டுமானல் என்ன செய்கிறோம்? கடிதம் எழுதித் தபாலில் போடுகிறோம் அல்லவா? கடிதம் எப்படி எழுதுவது என்பதை இப்போது கவனிப்போம்.

செய்திகள் கொஞ்சமாக இருந்தால் தபாலாபீசில் ஒரு **கார்டு** வாங்கி அதில் எழுதலாம். சமாசாரங்கள் அதிகமாகவும், இரகசியமாகவும் இருந்தால் **கவர்** உபயோகிக்க வேண்டும். கவர் என்பது ஒரு சிறிய காகித உறை ஆகும். கவர்,

கார்டு இவற்றின் மேல் ஒரு பக்கத்தில் அரசாங்கத் தலைவரின் தலை முத்திரை அச்சிடப்பட்டிருக்கும். அந்த முத்திரையில் தபாற் கட்டணமும் குறிப்பிட்டிருக்கும். அதற்கு **ஸ்டாம்பு** என்று பெயர். கார்டிற்குக் கட்டணம் அரையணு; கவருக்குக் கட்டணம் ஒன்றரை அணு.

கார்டில் ஸ்டாம்பு உள்ள பக்கத்தில் மேல் விலாசமும், மற்றொரு பக்கத்தில் செய்திகளும் எழுத வேண்டும். கவரை உபயோகிக்கும்போது, ஸ்டாம்பு உள்ள பக்கத்தில் மேல் விலாசம் எழுத வேண்டும்; ஒரு வெற்றுக் காகிதத்தில் செய்திகளை எழுதி, அதை மடித்து அவ்வுறைக்குள் இட்டு, உறையை ஒட்டிவிட வேண்டும்.

கடிதம் எழுதுவதற்குத் தபாலாபீசில் கொடுக்கப்படும் கார்டு அல்லது கவரைத் தவிர, வேறு அட்டைத் துண்டு அல்லது உறையையும் உபயோகிக்கலாம். ஆனால் அவற்றின் மேற் பக்கத்தில் தபால் ஸ்டாம்புகளைத் தனியே வாங்கி ஒட்ட வேண்டும். இந்தியத் தபால் ஸ்டாம்புகள் தபாலாபீசுகளில் விற்கப்படும். அவை காலணு முதற்கொண்டு பல வேறு விலையுள்ளவை. விலைகள் மாறுபடுவதற்கேற்பப் பலவேறு நிற முடையவை.

இனி, கடிதம் எழுதும் முறையைக் கவ

னிப்போம். மாதிரிக் கடிதத்தில் உள்ளதுபோல், மேலே வலது கோடியில் இடமும் தேதியும் குறிக்க வேண்டும். இடது பக்கத்தில் இன்னுருக்கு இன்னுர் எழுதியது என்ற விவரம் எழுத வேண்டும். பிறகு விஷயங்களை எழுத வேண்டும். கடைசியில், வலது பக்கத்தில் எழுதுவோரின் கையெழுத்து இடவேண்டும். பெரியவர்களுக்குக் கடிதம் எழுதும்போது, **நமஸ்காரம்** அல்லது **வணக்கம்** என்றும், சிறியவர்களுக்கு எழுதும் போது, **ஆசீர்வாதம்** அல்லது **நலம்** உண்டாகுக என்றும் தொடங்க வேண்டும்.

மேல் விலாசத்தில், யாருக்கு எழுதுகிருேமோ அவருடைய பெயர், இருப்பிடம், ஊர், போஸ்டு ஆகிய விவரங்களைத் தெளிவாக எழுத வேண்டும். மேற்புறத்தில், இடது கோடியில் அனுப்புவோரின் விலாசமும் குறிக்கலாம்.

## மாதிரிக் கடிதம்

திரிசிராப்பள்ளி,
10-6-48.

அன்புமிக்க மாமா அவர்களுக்குப் பொன்னம்பலம் வணக்கம். இவ்விடம் எல்லாரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமங்களுக்கு அடிக்கடிக் கடிதம் எழுத வேண்டுகிறேன்.

நான் இப்போது மூன்ருவது வகுப்பில் படிக்கிறேன். அப்பா புதிய புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தார். நான் அவற்றைக் கவனமாகப் படித்துவருகிறேன். தாங்கள் இங்கு வரும்போது, எனக்கு ஒரு பட்டுச் சொக்காய் கொண்டு வந்து கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். என் வணக்கத்தை அத்தை அவர்களுக்கும் தெரிவிக்கக் கோருகிறேன்.

இங்ஙனம்,

பொன்னம்பலம்

மேல் விலாசம்

திரு. மாசிலாமணி அவர்கள்,
நெ. 18, மேல ராஜ வீதி,
புதுக்கோட்டை,
புதுக்கோட்டை போஸ்டு,
திருச்சி ஜில்லா.

அனுப்புதல் :—

பொன்னம்பலம்,
நெ. 25, ஆண்டார் வீதி,
தெப்பகுளம் போஸ்டு,
திரிசிராப்பள்ளி.

| | | |
|---|---|---|
| கார்டு | மேல் விலாசம் | தபாலாபீஸ் |
| கவர் | இரகசியம் | வெற்றுக் காகிதம் |
| உறை | கட்டணம் | சமாசாரங்கள் |
| ஸ்டாம்பு | முத்திரை | நமஸ்காரம் |
| போஸ்டு | ஆசீர்வாதம் | வணக்கம் |

### கேள்விகள்

1. கார்டை உபயோகிப்பது எப்போது?
2. கவரை உபயோகிப்பது எப்போது?
3. மேல் விலாசத்தில் என்னென்ன விவரங்கள் எழுத வேண்டும்?

### பயிற்சி

1. உன் சிறிய தந்தைக்கு உனது படிப்பைப் பற்றி ஒரு கடிதம் எழுது.
2. விடுமுறை நாட்களில் நீ என்ன படிக்கிறாய் என்பதைப் பற்றி உன் ஆசிரியருக்கு ஒரு கடிதம் எழுது.

## 20. உல்லாசப் பிரயாணம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை நாங்கள் முக்கொம்பு மூனையைப் பார்க்கச் சென்றோம். ஆண்களும், பெண்களுமாக நாங்கள் ஐம்பது பிள்ளைகள் சேர்ந்தோம்; நான்கு ஆசிரியர்கள் எங்களை அழைத்துச் சென்றார்கள்.

சூரிய உதயத்தில் புகைவண்டி திருச்சிராப்பள்ளிக் கோட்டை ஸ்டேஷனை விட்டுப் புறப்

பட்டது; சுமார் முக்கால் மணி நேரத்தில் எலமனூர் ஸ்டேஷனை அடைந்தோம். நான் சென்றது கோடைக்காலம். காவிரியில் இரண்டு கரையோரங்களிலும் மட்டும், முழங்காலளவு தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. நாங்கள் உற்சாகமாக நடந்து சென்று காவிரியாற்றைக்

கடந்தோம். எதிர்க் கரை ஒரு பரந்த சோலை. மா, நாவல், கொய்யா முதலிய பழமரங்களும் அங்கு இருந்தன.

அச்சோலையில் சிறிது நேரம் நாங்கள் இளைப்பாறினோம்; பிறகு எங்கள் கட்டுச் சோற்று மூட்டைகளை அவிழ்த்தோம்; ஒருவரோடொ

ருவர் வேடிக்கையாகப் பேசிக்கொண்டே உணவு அருந்தி, காவிரி நீர் பருகினேம். அப்பால் எங்கள் ஆசிரியர்கள் அங்குள்ள காட்சிகளைக் காண்பித்தார்கள்.

மேற்கிலிருந்து வருகிற காவிரியாறு அவ்விடத்தில் இரண்டாகப் பிரிகிறது. அவ்வாறு

பிரிகிற முனையே முக்கொம்பு எனப்படுகிறது. முக்கொம்பில் ஒரு நல்ல படித்துறையும் கட்டப்பட்டிருக்கிறது. வடக்கில் பாய்வது கொள்ளிடம் என்றும், தெற்கில் பாய்வது காவிரியின் தொடர்ச்சி என்றும் எங்கள் ஆசிரியர்கள் கூறி

னூர்கள். கொள்ளிடத்தைக் கடந்து செல்ல ஓர் உறுதியான பாலம் கட்டப்பட்டிருக்கிறது. அது ஒரு அணைக்கட்டுப் பாலம். மேற்கிலிருந்து வரும் வெள்ளத்தை வேண்டிய அளவு தேக்குவதற்கும், விடுவதற்கும் இரும்புக் கதவுகள் அப்பாலத்தின் கீழ்ப்புறத்தில் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றைத் தூக்கவும், இறக்கவும் உதவும் உருளை இணைப்புக்களையும் பார்த்தோம். ஒரு உத்தியோகஸ்தர் ஒரு கதவைத் தூக்கியும் இறக்கியும் காண்பித்தார்.

நாங்கள் எங்கள் ஆசிரியர்களைப் பார்த்து "இவ்வணைக்கட்டு எதற்காக?" என்று கேட்டோம். "காவிரியாறு மிகப் பழமையான நதி; அது நாளடைவில் மணலினுல் மோடாகிப் போயிற்று; அதனுல் வெள்ளம் வேறு திசையை நோக்கிக் கொள்ளிடமாகப் பிரிந்தது; கொள்ளிடம் வயல் மட்டத்தைவிடப் பள்ளம். ஆகையால் அதில் பாயும் நீர் பாசனத்திற்குப் பயன் படுவதில்லை. வெள்ளமெல்லாம் வீணிலே கடலை அடையும். அதனுல் பாசனத்திற்கு வேண்டிய அளவு நீரைக் காவிரியாற்றில் திருப்பிவிடுவதற்கு இவ்வணை கட்டப்பட்டது. மிகுதியான நீர் கொள்ளிடத்தில் விடப்படும். இவ்வணைக்கு மேலணை என்று பெயர்" என்று எங்கள் ஆசிரியர்கள் கூறினுர்கள்.

இரண்டு ஆறுகளின் இரு கரைகளிலும் சோலைகளும், படுகைகளும் நிறைந்து அழகாகக் காணப்பட்டன. ஆறுகளின் நடுக்கரை கிழக்கே செல்லச் செல்ல அகன்று விரிகிறது. அதில்தான் திருவரங்கம், திருவானைக்கா ஆகிய திருப்பதிகளும், பல கிராமங்களும் இருக்கின்றன.

“முக்கொம்பிலிருந்து கிழக்கே இருபது மைல் தூரத்தில் காவிரியின் குறுக்கே மற்றொரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அதற்குக் கல்லணை என்று பெயர். அவ்வணையிலிருந்து காவிரியின் நீர் பல சிற்றாறுகளில் திருப்பப்படுகிறது. அவ்விடத்தில் உள்ளாறு என்னும் சிற்றாறு வெட்டப்

பட்டிருக்கிறது. அச்சிற்ருறு காவிரியையும் கொள்ளிடத்தையும் சேர்க்கின்றது. நடுக்கரையில் உள்ள நிலப்பரப்பு ஒரு தீவு போன்றது," என்று எங்கள் ஆசிரியர்கள் கூறினர்கள்.

இவ்வாறு பல காட்சிகளையும் கண்டு களிப் படைந்தோம். சிறிது நேரம் நடுக்கரைச் சோலை களில் விளையாடினேம். அங்குள்ள பழமரங் களில் காகங்களும், கிளிகளும் காணப்பட்டன. அணிற்பிள்ளைகள் பழங்களைக் கொறித்துத் தின்றுகொண்டு மரக் கிளைகளில் அங்குமிங்கும் ஓடின. குரங்குகள் கூட்டம் கூட்டமாக மரக் கிளைகளில் வசித்தன. அவைகள் வயிற்றுக் குட்டிகளோடு கிளைக்குக் கிளை தாவுவது எவ்வளவு விநோதமாயிருந்தது!

மாலையில் நான்கு மணிக்கு மறுபடியும் காவிரியைக் கடந்து தென்கரை வந்து, எலம னூரை அடைந்தோம். மாலை ரயிலில் ஏறி விளக்கு வைக்கும் நேரத்தில் கோட்டை ஸ்டே ஷன் வந்தோம். உபாத்தியாயர்கள் எங்களை 'ஆஜர்' கூப்பிட்டார்கள். பிறகு எங்கள் வீடு களுக்குச் சென்றேம்.

| | | |
|---|---|---|
| சூரிய உதயம் | முழங்காலளவு | கடந்தோம் |
| ஸ்டேஷன் | எதிர்க்கரை | அருந்தி |
| துறை | உத்தியோகஸ்தர் | பாசனத்திற்கு |
| தொடர்ச்சி | படுகை | தாவுவது |

### கேள்விகள்

1. முக்கொம்பு என்பது எந்த இடத்தின் பெயர் ?
2. கொள்ளிடம் எப்படி காவிரியிலிருந்து பிரிந்தது?
3. 'உள்ளாறு' என்பது எங்கிருக்கிறது ?

### பயிற்சி

1. எதிர்ப்பதங்கள் எழுது :—
மேற்கு, பிரிகிறது, தூக்கி, பள்ளம்.

2. கோடிட்ட இடங்களில் பின்வரும் அடுக்குத் தொடரான வார்த்தைகளைச் சரியானபடி அமைத்து எழுது :—

(i) குரங்குகள் —— —— வசித்தன.
(ii) காய்கள் —— —— காய்த்தன.
(iii) எறும்புகள் —— —— செல்கின்றன.
(iv) வாழைப் பழங்கள் —— —— தொங்குகின்றன.

(தார்தாராக, கொத்துக் கொத்தாக, கூட்டங் கூட்டமாக, சாரிசாரியாக.)

## 21. மரியாதை அறிந்த சிறுவன்

ஒரு பெரிய உத்தியோகஸ்தர் தமக்கு ஒரு மரியாதையறிந்த சிறுவன் வேலைக்கு வேண்டுமென்று விளம்பரம் செய்தார். இரண்டு இளைஞர்கள் அவ்வேலைக்காக மனுச் செய்து கொண்டார்கள். தம்மை நேரில் வந்து காணும்படி அவ்வுத்தியோகஸ்தர் அவர்களுக்குப் பதில்

எழுதிவிட்டார். குறிப்பிட்ட தேதியில் மனுதாரர்கள் இருவரும், அவ்வுத்தியோகஸ்தரின் காரியாலயத்திற்குச் சென்றூர்கள். இரண்டு இளைஞர்கள் அக்காரியாலய வாயிலில் ஒருவரையொருவர் சந்தித்தார்கள்.

அவர்களுள் ஒருவன் வெகு அவசரமாக உத்தியோகஸ்தரின் அறைக்குச் சென்றான். அவ்



வறையின் கதவு தாளிடப்பட்டிருந்தது. அவசரச் சிறுவன் ‘ தடதட ’ வென்று கதவைத் தட்டினன்; ‘ ஐயா, ஐயா ’ வென்று உரக்க அழைத்தான். உத்தியோகஸ்தர் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்தார். அவன் தம்

மிடம் வேலை நாடிவந்த சிறுவன் என்று தெரிந்து கொண்டார். "சிறுவ, உனக்கு ஏற்ற வேலை இங்கு இல்லை" என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார்.

மற்ற இளைஞன் பொறுமையாக வாயிலண்டையே காத்திருந்தான். தனக்கு வந்த பதிலில் குறிப்பிடப்பட்டிருந்த நேரம் வந்தது. பிறகு அவன் உத்தியோகஸ்தரின் அறையை அடைந்தான். மூடப்பட்டிருந்த கதவில் மெல்ல ஒரு விரலால் ஒரு முறை தட்டினான். உடனே அவர் எழுந்து வந்து, "வருக" என்று அவனை அழைத்தார். சிறுவன் பணிவுடன் உள்ளே சென்று நின்றான். அவர் கேட்ட வினாக்களுக்கு அவன் மரியாதையாகவும், தெளிவாகவும் விடை அளித்தான். சிறுவனுடைய மரியாதையைக் கண்டு அவர் களிப்படைந்தார். அன்று முதல் அவனைத் தம்மிடம் வேலைக்கு வைத்துக்கொண்டார். சிறுவனும் அவர் இட்ட வேலைகளைச் செவ்வனே செய்து வந்தான். நாளடைவில் அவன் தன் எஜமானருடைய உதவியால் ஒரு சிறு உத்தியோகஸ்தனாக உயர்வு அடைந்தான்.

"மரியாதை மதிப்பைத் தரும்" என்ற நீதி இக்கதையினால் விளங்குகிறது அல்லவா? சிறு பிள்ளைகளாகிய நீங்கள் யார் யாரிடத்தில் எப்படி

நடந்துகொள்ளவேண்டும் என்று தெரிந்து கொள்ளவேண்டும். பெரியோரிடத்தில் பணிவு உடையவராக இருக்கவேண்டும்.

வகுப்பில் அமைதியாக நடந்துகொள்ள வேண்டியது பிள்ளைகளின் கடமை. ஒரு பிள்ளையை உபாத்தியாயர் ஏதாவது கேள்வி கேட்டால், மற்றவர் உடன் எழுந்து கூவக்கூடாது. பிள்ளைகள் தாம் ஆசிரியரிடத்தில் ஏதாவது கூற விரும்பினால், தம்முடைய இடத்தில் பொறுமையாக எழுந்து நிற்கவேண்டும். உபாத்தியாயர் கேட்ட பிறகே தாம் சொல்ல விரும்பியதைச் சொல்லவேண்டும். "சொல்லெனச் சொல்லி, இருவென இருந்து, போவெனப் போதல்," இவை பிள்ளைகள் வகுப்பில் தெரிந்துகொள்ள வேண்டிய மரியாதை முறைகள்.

| | | |
|---|---|---|
| மரியாதை | மனுதார் | தடதடவென்று |
| உத்தியோகஸ்தர் | தாளிடப்பட்டு | தெளிவாக |
| காரியாலயம் | வாயிலில் | எஜமானர் |
| சந்தித்தார் | பணிவு | தேதி |

## கேள்விகள்

1. அவசரச் சிறுவன் என்ன செய்தான் ?
2. மரியாதை அறிந்த சிறுவன் என்ன செய்தான் ?
3. மரியாதையால் ஏற்படக்கூடிய பயன் யாது ?

## பயிற்சி

1. முதல் வகுப்பில் நீங்கள் எழுத்துக்களைக் கற்றுக் கொண்டீர்கள். எழுத்துக்களின் வகைகளையும் தொகைகளையும் இப்பொழுது தெரிந்துகொள்வோம்.

2. **அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ,** இந்தப் பன்னிரண்டும் **உயிர் எழுத்துக்கள்.**

3. **க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன்,** இந்தப் பதினெட்டும் **மெய்யெழுத்துக்கள்.**

4. **க** என்பது **க்** என்ற மெய்யும், **அ** என்ற உயிரும் சேர்ந்த எழுத்து. இதே போல், **கு=க்+உ ; தி=த்+இ.** இம்மாதிரியே பதினெட்டு மெய்யெழுத்துக்களும் தனித் தனியே பன்னிரண்டு உயிருடன் சேர்ந்தால் 216 எழுத்துக்கள் ஆகும். இவை **உயிர்மெய் யெழுத்துக்கள்** எனப்படும்.

5. ஃ என்பது மூன்று புள்ளி வடிவமான **ஆய்த எழுத்து**.

6. தமிழ் எழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? என்னென்ன ?

# 22. காந்தியின் இளமை

மகாத்மா காந்தியைப்பற்றி நாம் எல்லோரும் அறிவோம். உலகத்தார் எல்லோரும் அவரை ஓர் உத்தமர் என்று கொண்டாடுகிறுர்கள். இந்திய நாடு சுயராஜ்யம் பெறுவதற்காக அவர் பல ஆண்டுகள் அல்லும் பகலும் உழைத்தார். அவருடைய தலைமையில் தேச பக்தர்கள் எண்ணிறந்தோர் ஒத்துழைத்தார்கள். அவருடைய ஆயுட் காலத்திலேயே 1947ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி, நம் நாடு சுதந்திரம் பெற்றது. நாட்டிற்கே உழைத்த உத்தமர் 1948-ம் வருஷம் ஜனவரி மாதம், 30

ஆம் நாள், ஓர் அறிவிலியால் சுட்டு வீழ்த்தப் பட்டு உயிர் துறந்தார். எல்லாத் தேசத்தாரும் அவரை அவருடைய ஆயுட்காலத்தில் போற்றி னூர்கள்; இறந்த பிறகும் அவருடைய பெரு மையை எல்லோரும் பாராட்டுகிருர்கள். இவ் வாறு அவர் நீங்காத புகழைப்பெற்றது எதனுல்? இளமையிலிருந்தே அவர் கொண்டிருந்த நற் பண்புகள் பல; அப்பண்புகளாலேயே அவர் பெரியவரானபின் சிறந்து விளங்கினூர். இளமை யில் அவர்பால் விளங்கிய சீரிய குணங்களில் இரண்டொன்றைப்பற்றி இப்போது படிப்போம்.

இளமையில் அவர் நமது தேசத்தில் ராஜ் கோட் என்னும் இடத்தில் கல்வி கற்ருர். பிறகு மேல்படிப்பிற்காக இங்கிலாந்து சென்ருர். அப் போது, அவருடைய தாயார் அவரை நோக்கி "உன்னுடைய ஒழுக்க நெறிகளை நீ எப்போதும் கைவிடாதே. ஒருபோதும் புலால் உண்ணுதே" என்று உபதேசம் செய்தார். இங்கிலாந்தில் புலால் இல்லாமல் வாழ்வது மிகக் கடினம். நம் நாட்டிலுள்ள காய்கறி உணவுகள் அங்கே கிடைக்கமாட்டா. அவ்வாறு இருந்தும் அவர் தாய்சொல் துறக்கவில்லை. உறுதியுடன் தம் ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடித்தார்.

அவ்வுறுதியே அவரைப் பிற்காலத்தில் உலகம் போற்றும் உத்தமராகச் செய்தது. எவ்விதமான கஷ்டங்கள் நேர்ந்தாலும், அவர் தம்முடைய முயற்சியைக் கைவிடமாட்டார்.

உண்மையை மறைக்கும் தீயகுணம் அவரிடம் இளமையிலிருந்தே இல்லே. ஒரு சமயம் பரிக்ஷாதிகாரி அவர் படித்த பாடசாலையைப் பார்வையிட்டார். அப்போது உபாத்தியாயர் கொடுத்த ஒரு கணக்கை மற்றெல்லாப் பிள்ளைகளும் சரியாகச் செய்தார்கள்; காந்தியார் மட்டும் பிழைபடச் செய்திருந்தார். உபாத்தியாயர் அவருடைய கற்பலகையைப் பார்த்தார்; ஒருவருக்கும் தெரியாமல் அக்கணக்கைத் திருத்தச் சொன்னுர். ஆனுல், காந்தியார் அவ்வாறு திருத்தித் தம் பிழையை மறைக்க விரும்பவில்லே. தம் பிழையை உண்மையாகவே ஒப்புக்கொண்டார்.

காந்திமகான் தம் வாழ்நாளில் எல்லாக் காரியங்களிலும், எப்போதும் உண்மையாகவே ஒழுகி வந்தார். அவ்வுண்மையால் அவர் பல உயர்வுகளேப் பெற்றுர். "தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில்" என்பது பழமொழி. இளமையில் குணம் படியாவிடில் பிற்காலத்தில் வாழ்வு கெடும். இளமையில் நல்ல குணங்கள் படிந்தால்

**தகப்பனூர்** :—ஆம்.

**மணியன்** :—அடுத்த கூட்டில் இருப்பது புலி போலக் காணப்படுகிறது. பார்த்து விட்டு வரலாம் வாருங்கள்.

**தகப்பனூர்** :—சரி, வா.

**மணியன்** :—இந்தப் புலி எங்கள் பாடப் புத்தகத்தில் உள்ள சித்திரத்தைப் போலவே இருக்கிறது. இதற்குப் பலம் அதிகமா, சிங்கத்திற்குப் பலம் அதிகமா? சிங்கத்திற்கு தானே அதிகம்?

**தகப்பனூர்** :—எதற்கு அதிகம் என்று சொல்ல முடியாது. சிங்கம் சிறியதா யிருந்தால் சண்டையில் புலி ஜயிக்கும். புலி சிறியதாயிருந்தால் சண்டையில் சிங்கம் ஜயிக்கும்.

**மணியன்** :—சரிதான். அங்கே கரடி இருக்கிறதாம். அதைப் பார்க்கலாம் வாருங்கள்.

**தகப்பனர்** :—சரி, போவோம் வா.

**மணியன்** :—இதோ பாருங்கள்; இங்கே கிணற்றுக்குள்ளே கரடி இருக்கிறது. இதை ஏன் இப்படி வைத்திருக்கிறார்கள்?

**தகப்பனர்** :—கொடிய மிருகங்களைப் பாதுகாக்கும் முறையில் இதுவும் ஒன்று. ஜனங்கள் மேலே இருந்தபடி பயமில்லாமல் இதைப் பார்க்கலாம் அல்லவா?

**மணியன்** :—கரடிகளில் வெள்ளைக் கரடி என்று ஒன்று உண்டாமே? அது இதைப் போலத் தானே இருக்கும்?

**தகப்பனர்** :—ஆம். அதுவும் இந்தக் காட்சி சாலையில் இருக்கிறது. அது வேருேரிடத்தில் இருக்கிறது. போய்ப் பார்க்கலாம் வா.

**மணியன்** :—சரி, வாருங்கள் அப்பா, போகலாம்.

**தகப்பனர்** :—இதோ பார் வெள்ளைக்கரடி. இது மிகவும் கொரேமானது. இது குளிர் அதிகமாக உள்ள, பனிக்கட்டிப் பிரதேசங்களில் இருக்கும்.

**மணியன்** :—ஆம், நானும் பூகோளப் புத்தகத்தில் படித்திருக்கிறேன். எஸ்கிமோக்கள் வசிக்கும் பிரதேசத்தில் இது இருக்கிறது. அங்கே ஸீல், வால்ரஸ் என்னும் பிராணிகளும் உள்ளன. அவை இந்தக் காட்சிச் சாலையில் இருக்கின்றனவா, அப்பா ?

**தகப்பனர்** :—இல்லை. இங்கே ஒரு காட்டுப் பன்றி இருக்கிறது. பார்ப்போம் வா.

**மணியன்** :—காட்டுப்பன்றி எப்படி இருக்கும் ?

**தகப்பனர்** :—அது ஊர்களில் நாம் பார்க்கும் பன்றியைப் போலவே தான் இருக்கும். ஆனல் அது மிகவும் கொடியது. நம்மைக் கண்டவுடன் அது எவ்வளவு கோபத்தோடு உறுமிக் கொண்டு வருகிறது பார். காட்டில் இது மனிதரைக் கண்டால், உடனே மேலே பாய்ந்துவிடும். சில சமயங்களில் இது புலியையும் கொன்றுவிடும்.

**மணியன்** :—அப்படியா, அவ்வளவு கொடியதா இது ? வாருங்கள் போகலாம்.

**தகப்பனர்** :—சரி.

**மணியன்** :—அப்பா, இதோ பாருங்கள். எத்தனை வகையான குரங்குகள்! இதோ இந்தக் குரங்கிற்கு நாமம் போட்டிருக்கிறார்கள். எவ்வளவு அழகாக இருக்கிறது பாருங்கள்!

**தகப்பனர்** :—இதற்கு ஒருவரும் நாமம் போடவில்லை. இயற்கையிலேயே இதன் நெற்றியில் நாமம் ஏற்பட்டிருக்கிறது.

**மணியன்** :—அப்படியா, எவ்வளவு ஆச்சரியம்! இதோ குட்டை வால் குரங்கு; இதோ கறுப்புக் குரங்கு. இது தாவித்தாவி என்னென்ன வேடிக்கையெல்லாம் செய்கிறது பாருங்கள்! இதோ ஒரு குரங்கு, தன்

குட்டியை வயிற்றில் வைத்துக்கொண்டு தாவுகிறது. குட்டி கீழே விழாமல் எப்படி அப்பா இருக்கிறது?

**தகப்பனுர்** :—அது கெட்டியாய்த் தன் கைகளாலும், கால்களாலும் தாயின் உடம்பைப் பிடித்துக் கொள்கிறது. சரி வா. அந்தப் பக்கம் பலவிதப் பறவைகள் இருக்கின்றன, பார்க்கலாம்.

**மணியன்** :—சரி, வாருங்கள்.

**தகப்பனுர்** :—இதோ பார் மயில்களை. இதோ



இருப்பது வெள்ளை மயில். இதோ தோகை இல்லாமல் இருப்பது பெண் மயில்.

**மணியன்** :—இதோ ஒரு பெரிய பறவை இருக்கிறதே. இதன் பெயர் என்ன, அப்பா?

**தகப்பனுர்** :—இது நாரை என்னும் பறவை. இதோ பார். எத்தனை வகையான கிளிகள்!

**மணியன்** :—ஆம், வெள்ளைக்கிளி, பச்சைக்கிளி, சிவப்புக் கிளி, பஞ்சவர்ணக் கிளி எல்லாம் இருக்கின்றன.

**தகப்பனர்** :—இதோ கம்பி வலையால் மூடப்பட்டுள்ள இந்த இடத்தில் எத்தனை வகையான குருவிகள் இருக்கின்றன பார் !

**மணியன்** :—மஞ்சள், ஊதா, கறுப்பு, வெள்ளை, பல வகை நிறங்கள் கலந்தவை எல்லாம் இருக்கின்றன. ஆஹா ! எவ்வளவு அழகாய் இருக்கின்றன ?

**தகப்பனர்** :—எல்லாம் பார்த்தாகிவிட்டது. வா, வீட்டிற்குப் போகலாம்.

| | | |
|---|---|---|
| இரும்புக்கிராதி | காட்சிச்சாலை | பாய்ந்துவிடும் |
| உறுமிக்கொண்டு | காட்டுப்பன்றி | பிடரிமயிர் |
| எஸ்கிமோக்கள் | கொடூரமானது | பின்வருமாறு |
| ஒப்புக்கொள்ளவே | நாரை | பூகோளபாடம் |

## கேள்விகள்

1. காட்சிச்சாலேயில் இருந்த மிருகங்கள் யாவை? பறவைகள் யாவை?

2. காட்சிச் சாலேயைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது.

3. காட்டுப்பன்றி எப்படிப்பட்டது? குரங்குகளில் பல வகைகள் எவை?

## பயிற்சி

1. பின் வரும் வாக்கியங்களில் வினு வாக்கியங்கள் எவை, சாதாரண வாக்கியங்கள் எவை என்று கூறு:

(i) ராமன் ஓடினுன்.

(ii) கேசவன் எங்கே ஓடினுன்?

(iii) வேலன் வந்தானு?

(iv) அவன் அழுதான்.

(v) இது யாருடைய புத்தகம்?

(vi) இது என் புத்தகம்.

2. இந்தப் பாடத்திலிருந்து நான்கு வினு வாக்கியங்களேச் சொல்லு.

# 24. நெசவுத் தொழில்

பஞ்சு, பட்டு முதலியவற்றைக் கொண்டு துணிகளைச் செய்தல் நெசவுத் தொழில் எனப் படும். இந்தத் தொழில் நமது நாட்டில் தொன்றுதொட்டு நடந்து வருகிறது. இப் போது பஞ்சிலிருந்து ஆடைநெய்வது எப்படி என்று கவனிப்போம்.

பருத்திக் காயிலிருந்து பஞ்சு கிடைக்கிறது. பருத்திக் கொல்லைகளில், பருத்திச் செடியில் காய் கள் உண்டாகும். காய் முற்றி வெடித்த பிறகு அதிலிருந்து பஞ்சு எடுப்பார்கள். பஞ்சை எல்





லாம் சேகரித்த பிறகு, அதைச் சாக்கில் போட்டுப் பொதி ஆக்கித் துணி நெய்யும் இடத்திற்குக் கொண்டுபோவார்கள்.

நெசவுச் சாலையில் முதலில் பருத்தியிலுள்ள விதைகளைப் போக்குவார்கள். இதற்காகத் திரிமணை என்ற ஒரு கருவி உண்டு. அதில் ஒரு பக்கத்தில்

பஞ்சைக் கொடுத்துக் கொண்டே கைப்பிடியைச் சுற்றினால், வேறு பக்கத்தில் கொட்டை எடுத்த பஞ்சு வெளிப்படும்.

இப்படி எடுத்த பஞ்சில் குப்பை கூளங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். இவற்றைப் போக்க 'வில்' என்ற ஒரு கருவி உண்டு. இவ்வாறு சுத்

தம் செய்யப்பட்ட பஞ்சைப் பட்டை போடு வார்கள்.

பட்டை போடுதலாவது சிறு சிறு திரிக ளாக ஆக்குதலாம். பிறகு திரிகளை **ராட்டினம், தக்ளி** இவற்றின் உதவியால் நூல் நூற்பார்கள். அந்த நூலைப் பரிவட்டம் என்னும் ஒரு கருவி



யால் சுற்றுவார்கள். அப்பால் அந்த நூலை வெளியிடங்களில் பாவுகளாக விரித்துக்கட்டிச் சிக்கு எடுத்துத் துணி நெய்வார்கள். துணி நெய்யும் கருவி **தறி** எனப்படும். தறியில் நெசவு செய்வதைப் படத்தில் பாருங்கள். மேற் கூறிய வாறு துணி நெய்தல் 'கைத்தறி நெசவு' எனப்படும்.

தற்காலத்தில் பஞ்சிலிருந்து விதை எடுத்தல், பஞ்சிலுள்ள குப்பை கூளங்களைப் போக்குதல், பஞ்சை நூலாக நூற்றல், நூலை ஆடைகளாக நெய்தல் ஆகிய எல்லாக் காரியங்களும் எந்திரங்களின் மூலமாகவும் நடைபெறுகின்றன. இவ்வித நெசவு, 'மில் நெசவு' எனப்படும்.

மில் நெசவில் வேலை சீக்கிரம் ஆகும். பொருளும் அதிகமாய் உற்பத்தியாகும். வேலையாட்கள் அதிகமாய் வேண்டியதில்லை. பல ஆட்கள் பல நாள் செய்யும் வேலையை ஒரு எந்திரம் ஒரே நாளில் செய்து முடித்துவிடும். இந்த எந்திரங்களைப் படத்தில் பாருங்கள்.

இக்காலத்தில் எந்திர நெசவாலைகள் நம் நாட்டில் பெருகி வருகின்றன. இவையும் நாட்டிற்கு வேண்டியவையே என்றாலும் கை நெசவையும் கைவிடலாகாது. கைத்தறி நெசவு ஒரு குடிசைத் தொழில்; அது ஏழைகளுக்குச் சுதந்திரமான தொழில். கைத்தறி ஆடைகள் மிக்க நேர்த்தியானவை.

| | | |
|---|---|---|
| **தக்ளி** | **எந்திரங்கள்** | **தொன்றுதொட்டு** |
| **தறி** | **இராட்டினம்** | **நெசவுச்சாலை** |
| **திரி** | **உற்பத்தியாகும்** | **பட்டைபோடுதல்** |
| **நெசவு** | **கைத்தறி நெசவு** | **பரிவட்டம்** |
| **பஞ்சு** | **கைப்பிடி** | **பருத்திக்கொல்லை** |
| **பாவு** | **திரிமணை** | **பொதி** |

## கேள்விகள்

1. பஞ்சை நூலாக நூற்பது எப்படி ? நூலை ஆடையாக நெய்வது எப்படி ?

2. ஆடை நெய்வதற்கு உபயோகமாகும் கருவிகள் எவை ?

3. மில் நெசவினல் ஏற்படும் அனுகூலம் என்ன ?

## பயிற்சி

1. அடைப்புக் குறிகளுள் இருக்கும் சொல்லின் சரியான உருவத்தைக் கோடிட்ட இடங்களில் அமைத்துப் படி.

(i) மாணவன் ——. (ஓடு)

(ii) ஆசிரியர் புத்தகத்தைக் ——. (கற்பி)

(iii) காட்டில் மரங்கள் ——. (வளர்)

(iv) நாம் பருத்தியிலிருந்து ஆடை ——. (நெய்)

2. **ராமன் ஓடி வந்தான். ராமன் உட்கார்ந்தான்.**—இந்த இரண்டு வாக்கியங்களையும் சேர்த்து **ராமன் ஓடி வந்து உட்கார்ந்தான்** என்று எழுதலாம். இம்மாதிரியே பின்வரும் வாக்கியங்களைச் சேர்.

(i) மழை பெய்தது. மழை நின்றது.

(ii) முருகன் வந்தான். முருகன் உட்கார்ந்தான்.

# 25. நம் தாயகம்

பாரத நாடு நம் தாயகம். இந் நாட்டிற்கு இந்தியா என்பது மற்ருெரு பெயர். இந்தியாவின் குடிகள் இந்தியர் எனப்படுவர். இந்தியா மிகப் பரந்த தேசம். இத்தேசம் பலவித வளங்களும் நிரம்பப் பெற்றது.

இமயமலை என்பது இந்தியாவிற்கு வடக்கு எல்லை. அது உலகத்திலுள்ள மலைகள் எல்லாவற்றிலும் பெரியது. இத் தேசத்தின் நடு மத்தியில் விந்திய மலை அமைந்திருக்கிறது. விந்திய மலைக்கு வடக்கிலுள்ள பாகம் வட இந்தியா எனப்படும். விந்திய மலைக்குத் தெற்கிலுள்ள பாகம் தென்னிந்தியா எனப்படும்.

தென்னிந்தியாவின் கிழக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் கடல்கள் சூழ்ந்திருக்கின்றன. குமரி முனை என்பது இந்தியாவின் தெற்கு எல்லை. மேற்குக் கரையை யொட்டி மேற்குத் தொடர்ச்சி மலைகளும், கிழக்கில் கிழக்குத் தொடர்ச்சி மலைகளும் அமைந்துள்ளன.

இமய மலையிலிருந்து கங்கை, சிந்து, பிரம்மபுத்திரா என்ற பெரிய ஆறுகள் உற்பத்தியாகின்றன. அவை வட இந்தியாவிற்கு வளத்தைக் கொடுக்கின்றன. மேற்குத் தொடர்ச்சி மலைகளிலிருந்தும் பல ஆறுகள் உற்பத்தியாகின்றன. அவை தென்னிந்தியாவிற்கு வளத்தைக் கொடுக்கின்றன. கோதாவரி, கிருஷ்ணா, நர்மதை, தப்தி, காவிரி, வைகை, தாமிரபர்ணி என்பன தென்னிந்தியாவில் பாயும் ஆறுகள்.

இந்தியா ஒரு விவசாய நாடு. ஆகையால் இந் நாட்டில் உணவிற்குப் பஞ்சம் இல்லை. மற்றத் தொழில்களுக்கு வேண்டிய வசதிகளும் நம் நாட்டில் உண்டு. ஊக்கம் கொண்டு உழைத்தால் எந்தப் பொருளுக்கும் நாம் பிற நாட்டினரை நாட வேண்டியதில்லை.

இந்திய மக்கள் பல் வேறு சமயக் கொள்கைகளை அனுசரிக்கிறார்கள்; பல் வேறு மொழிகளைப் பேசுகிறார்கள். இந்து, இஸ்லாம்,

கிறிஸ்தவம், சீக்கியம், பௌத்தம், சமணம் முதலியன இந்தியர் அநுசரிக்கும் சமயங்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு வம், பார்சி, அரபி, உருது, குஜராத்தி, சௌராஷ்டிரம், வங்காளி, இந்தி, இந்துஸ்தானி முதலியன இந் நாட்டில் வழங்கும் மொழிகள்.

இந்தியர் உண்மை, வீரம், விசுவாசம், ஈகை முதலிய பண்புகளை உடையவர்கள். கல்வி, வர்த்தகம், போர் முறை, கைத் தொழில்கள் முதலியவற்றில் இந்தியர் தேர்ச்சி உடையவர். பிறப்பால் நாம் எல்லோரும் இந்தியர் என்ற ஒரே இனத்தைச் சேர்ந்தவராவோம். ஆகையால் நாம் ஒற்றுமையாகவும், சோம்பல் இல்லாமலும் உழைத்து வாழ வேண்டும். உலகத்தில் நம் நாட்டின் பெருமையை விளங்கச் செய்ய வேண்டும்.

| | | |
|---|---|---|
| பாரத நாடு | தாயகம் | குடிகள் |
| சமயம் | எல்லை | விவசாய நாடு |
| பஞ்சம் | நாடவேண்டிய அனுசரி | |

**கேள்விகள்**

1. இந்தியாவின் வடக்கு எல்லை எது? தெற்கு எல்லை எது?

2. வட இந்தியாவில் பாயும் பெரிய ஆறுகள் யாவை? தென் இந்தியாவில் பாயும் ஆறுகள் யாவை?

3. நாம் எல்லோரும் எவ்வாறு வாழவேண்டும்?

### பயிற்சி

1. பின் வரும் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் உபயோகி:

சமயம், தாயகம், சூழ்ந்து.

2. கீழே அடைப்புக் குறிகளிலுள்ள வார்த்தைகளில் தகுந்த ஒன்றைக் கோடிட்ட இடத்தில் வைத்து வாக்கியத்தை எழுது.

(i) மலையில் நதிகள் ——.

(ii) இந்தியா வளங்கள் ——.

(iii) நாம் ஒற்றுமையாக வாழ ——.

(iv) ஆறுகள் நாட்டிற்கு வளம் ——.

(நிரம்பப் பெற்றது, தருகின்றன, வேண்டும், உற்பத்தியாகின்றன.)

# 26. பள்ளிக்கூட நட்பு

## காட்சி—1

மங்கலம் கிராமத்தில் சோமேசர் வீடு—ஒரு நாள் மாலை நேரம்.

[சோமேசரும், அவர் மனைவி கயற்கண்ணியும் பேசிக் கொள்கிறார்கள்.]

**சோ:** குழந்தை கமலம் எங்கே?

**க:** கமலம் நீலவேணி வீட்டில் விளையாடிக் கொண்டிருப்பாள்.

**சோ:** நீலவேணி யார்? பள்ளிக்கூடத்துப் பெண்ணா?

கூ : ஆம், நீலவேணியும் பள்ளிக்கூடத்துப் பெண்தான். தெற்குத் தெருவிலுள்ள குச்சுவீட்டுக்காரர் மகள் அவள். இதற்குத் தான் கமலாவைப் பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டாம் என்று சொல்லுகிறேன். அவள் என் பேச்சைக் கேட்கிறதில்லை; மணி அடிப்பதற்கு முன் பள்ளிக்கூடத்தில் போய் நிற்கிருள்.

சோ : பள்ளிக் கூடத்திற்குப் போவது நல்ல பழக்கம். கமலா பள்ளிக்கூடத்தில் கருத்தாய் இருப்பது எனக்குச் சந்தோஷமே.

கூ : பள்ளிக்கூடத்தில் கருத்தாய் இருப்பது

எனக்கும் சந்தோஷமே. நீலவேணியோடு சரிசமமாக விளையாடுவது எனக்குப் பிடிக்க வில்லை. அதனால்தான் கமலாவைப் பள்ளிக் கூடத்திலிருந்து நிறுத்திவிடலாமா என்று எண்ணுகிறேன்.

சோ: இனம் இனத்தோடு சேரும். பெரியவர்கள் பெரியவர்களுடன் உறவாடுவார்கள். பிள்ளை கள் பிள்ளைகளின் நட்பை விரும்புவார்கள். கமலம் மற்றப் பிள்ளைகளுடன் பழகுவது நல்லதல்லவா?

க: பிள்ளைகள் பிள்ளைகளை நேசிப்பது நல்ல பழக்கம்தான். நாம் இவ்வூரில் பெரிய பண்ணை. வேறு பண்ணை வீட்டுப் பெண்கள் கமலாவுக்குக் கிடைக்கவில்லையா? குச்சுவீட் டுக்காரர் பெண்தானா கிடைக்கவேண்டும்!

சோ: நீ நினைப்பது மதியீனம். கமலாவே உனக்குச் சமாதானம் கூறுவாள்.

## காட்சி—2

சோமேசர் வீடு—காலைவேளை.

[நீலவேணி கமலாவைக் கூப்பிட வருகிறாள்—கமலாவும் நீலா வும் ஆடிப் பாடுகிறார்கள்—சோமேசரும் கயற்கண்ணி யும் கவனிக்கிறார்கள்.]

நீ: கமலா என்றன் தோழியே!
களிப்புடன் வா விளையாடவே!

க: நீல வேணி நேச முளாய்!
நேரே வருவாய் வீட்டி னுளே.

(இருவரும் கைகோத்து ஆடுகிருர்கள்)

கைகள் கோத்து ஆடிடு வோம்
கூடிப் பாடிக் களித்திடு வோம்
பாலப் பருவ நேயம் தான்
ஆயுள் முழுதும் நின்றிடு மே
செல்வர் ஏழைப் பேத மிலாச்
சீரிய பண்பைப் பெற்றிடு வோம் (கைகள்)

(நீலா, கமலாவை அழைத்துக் கொண்டு தன் வீட்டுக்குச் சென்று விட்டாள்—சோமேசரும் கயற் கண்ணியும் பேசிக் கொள்கிருர்கள்.)

**சோ** :—பார்த்தாயா குழந்தைகளை! அவர்களின் ஆட்டமும் பாட்டும் கவனித்தாயா?

**க** :—நன்ருகக் கவனித்தேன். "செல்வர் ஏழைப் பேத மில்லா" என்று கூடக் கூறினுர்களே!

**சோ** :—குழந்தைகளின் மனம் களங்கமற்றது. பழக்க வழக்கங்களின் குறைகளால்தான், அவர்கள் மனம் கெடக் கூடும். நேசிக்கும் இயல்பு இயற்கையில் ஏற்படக் கூடியது. இயற்கையை ஒட்டியே, நாமும் குழந்தை களை நல்ல வழியில் திருப்ப வேண்டும். நட்புச் செய்வதற்கு செல்வர், ஏழை என்ற வேற்றுமையைக் கவனிக்கக் கூடாது.

செல்வமும், வறுமையும் ஒரு வழி நில்லா. குணம் தான் சிநேகத்துக்கு முக்கியம். நீல வேணி மிகவும் நல்ல பெண். கமலாவும் அவளை நேசிக்கிருள். அவர்கள் நட்பு "நன்றே வாழ்க" என்று ஆசி கூறுவோம்.

## காட்சி—3

மதுரையில் கமலா வீடு.

[கமலாவுக்குச் சுரம்; மாமியார் கருணைநாயகி; கமலாவின் கணவன் பரமன்; லேடி டாக்டர் வேணி அம்மாள்.]

கருணை :—பரமா, கமலாவுக்குச் சுரம் கடுமையாக இருக்கிறது. லேடி டாக்டர் வேணி அம்மாளை அழைத்துவா. அந்த அம்மை கைராசி உடையவர்.

ப :—அம்மா, காரை அனுப்புகிறேன்; டாக்டர் அம்மாளை அழைத்துவரச்சொல்லுகிறேன். டிரைவரிடம் கடிதமும் எழுதிக் கொடுக்கிறேன். டாக்டர் அம்மா விரைவில் வருவார்கள்.

[டாக்டர் அம்மா வந்து கமலாவின் நாடியைப் பார்த்து மருந்து கொடுக்கிருர். நினைவு தப்பியிருந்த கமலா சிறிது நேரத்தில் நினைவைப் பெறுகிருள்.]

ப :—டாக்டர் அம்மா, அன்புடன் இச்சிறு தொகையைப் பெற்றுக் கொள்க. [இரண்டு பவுனை ஒரு தட்டில் வைத்துக் கொடுக்கிருர்.]

88958

கமலா உங்கள் தங்கை. சுரத்திலிருந்து அவளைக் காப்பாற்றுவது உங்கள் பொறுப்பு.

**வே :**—நண்பரே, உண்மையில் கமலா என் தங்கையே. அவளைச் சுகமுறச் செய்வது என் கடமை. கமலா விஷயத்தில் பணம்

வாங்குவது எனக்கு முறையல்ல. [பிறகு கமலாவைப் பார்த்து] கமலா, நன்றாகக் கண்ணைத் திறந்து பார். என்னைத் தெரிகிறதா உனக்கு? நீ பணக்காரி; நான் சாதாரணமான லேடி டாக்டர்! [கமலா உற்றுக் கவனிக்கிறாள்.]

**கமலா :**—அக்கா நீலவேணியா! சுர வேகத்தால்

TB D31(3) N48

கண் இருண்டு வந்தது. குரலைக் கேட்டு உன்னைக் கவனித்தேன். நீயும் இந்த ஊரில் தான் இருக்கிறாயா? சிறுவயதில் நாம் பள்ளிக்கூடத்தில் பழகினோம். பிறகு நீ சென்னைக்குப் படிக்கச் சென்று விட்டாய். நான் மங்கலத்திலேயே இருந்தேன்; இப் போது இவ்வூரில் வாழ்கிறேன். அக்கா, பணக்காரி என்ற செருக்கு எனக்கு எப் போதாவது உண்டா? உன்னைப் பார்த்தது எனக்கு வெகு மகிழ்ச்சி. இனி எனக்கு சுரம் போய்விடும்.

**வே**:—தங்காய், மூன்று நாளில் நீ முற்றிலும் குணம் அடைவாய். நான் இந்த ஊரிலேயே டாக்டராக இருக்கிறேன். அடிக்கடி உன்னை வந்து காண்கிறேன். நோய் எதுவும் இனி உன்னை அணுகாது. கவலைப்படாதே.

**கு**:—பள்ளிக் கூடத்தில் நாம் கொண்டிருந்த நட்பு இன்று பயன் அளித்தது. மங்க லத்தில் இருந்ததுபோல் மதுரையிலும் நாம் நேயமுடன் வாழ்வோம்.

### பயிற்சி

சில மாணவர் சேர்ந்து இந்த நாடகத்தை நடித்துக் காட்டுங்கள்.



# 27. வாழ்க! வாழ்க!

வாழ்க வாழ்க உலகெலாம்
வாழ்க எங்கள் தேசமும்
வாழ்க எங்கள் தமிழகம்
வாழ்க எங்கள் மனையறம்

வாழ்க மேழிச் செல்வமே
வளர்க நாட்டுக் கைத்தொழில்
வாழ்க எங்கள் வாணிபம்
வாழ்க நல்ல அரசியல்

அன்பு கொண்டு அனைவரும்
அச்சமின்றி வாழ்கவே
துன்பமேது மின்றி நம்
துக்கம் யாவும் நீங்கியே

இன்பமான யாவுமெய்தி
இந்த நாட்டில் யாவரும்
தெம்பினோடு தெளிவுபெற்றுத்
தேவர் போற்ற வாழ்குவோம்.

—நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை

## 28. ஆத்திசூடி

1. ஞயம்பட உரை.
2. இணக்கம் அறிந்து இணங்கு.
3. குணமது கைவிடேல்.
4. கேள்வி முயல்.
5. சான்றோர் இனத்திரு.
6. செய்வினை திருந்தச் செய்.
7. சொற் சோர்வு படேல்.
8. தக்கோன் எனத் திரி.
9. தூக்கி வினை செய்.
10. தேசத்தோடு ஒத்து வாழ்.
11. நன்மை கடைப் பிடி.
12. நாடு ஒப்பன செய்.
13. பூமி திருத்தி உண்.
14. மீதூண் விரும்பேல்.
15. உத்தமனாய் இரு.

—ஔவையார்

| | | |
|---|---|---|
| **ஞயம்** | **தூக்கி** | **விரும்பேல்** |
| **கேள்வி** | **ஒப்பன** | **இணக்கம்** |
| **சான்றோர்** | **திருத்தி** | **கடைப் பிடி** |
| **தக்கோன்** | **மீதூண்** | **சொற்சோர்வு** |

**அரும்பதவுரை : ஞயம்** - நயம். **இணக்கம்** - நட்பு. **கேள்வி** - கேள்வி யறிவு. **சான்றோர்** - நற்குணப் பெரியோர். **தக்கோன்** - தகுதியுடையவன். **தூக்கி** - ஆராய்ந்து. **வினை** - காரியம். **நாடு** - நாட்டிலுள்ளவர் ; மக்கள். **ஒப்பன** - சரி என்று ஒப்புக் கொள்ளும் காரியங்கள். **திருத்தி** - உழுது பண்படுத்தி. **மீதூண்** - அளவு மீறிய உணவு.

# 29. கொன்றை வேந்தன்

1. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று.
3. ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
4. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
5. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
6. கீழோர் ஆயினும் தாழ உரை.
7. குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை. [கல்வி.
8. கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள்
9. சீரைத் தேடின் ஏரைத் தேடு.
10. சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
11. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
12. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
13. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
14. நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்.
15. நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
16. பாலோடாயினும் காலம் அறிந்து உண்.
17. பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
18. மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
19. மாரி அல்லது காரியம் இல்லை.
20. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.

—ஔவையார்

| | | |
|---|---|---|
| சாலவும் | ஈயார் | கைப்பொருள் |
| தாழ | சுற்றம் | மந்திரம் |
| மெய்ப்பொருள் | தேம்பி | நல்லிணக்கம் |
| திரைகடல் | சுவை | துணி |
| அல்லல் | நுண்ணிய | தவிர் |
| பொல்லாங்கு | மாரி | முன்னறி |
| மூத்தோர் | தேட்டு | |

அரும்பதவுரை : **முன்னறி** - முதலில் அறியப் படும். **சாலவும்** - மிகவும். **ஈயார்** - (பிறருக்குக்) கொடுக் காதவர். **தேட்டை** - தேடி வைத்த செல்வத்தை. **சுற்றம்** - உறவினர். **மெய்ப்பொருள்** - உண்மையான செல்வம். **சீரை** - சிறப்பை. **ஏரை** - கலப்பையை, உழு தொழிலை. **தேம்பி** - வருந்தி. **மந்திரம்** - சிறந்த வார்த்தை. **திரை கடல்** - அலைகள் வீசும் கடல். **திரவியம்** - செல்வம். **தொழுதூண்** - பிறரிடம் சேவகம் செய்து சம்பாதித்த உணவு. **உழுதூண்** - உழவு தொழில் செய்து தேடிய உணவு. **நல்லிணக்கம்** - நல்லோருடன் நட்பாயிருத்தல். **அல்லல்** - துன்பம். **நுண்ணிய** - அற்பமான. **எண்ணித் துணி** - ஆலோசித்துத் தீர்மானஞ் செய். **பொல்லாங்கு** - தீயசெயல். **தவிர்** - செய்யாமல் விடு.

TB
TB 69(3)
88958
600 008

SOUTHERN PUBLISHERS